உ

சிவமயம்.

கணபதிதுணை.

விவேகசிந்தாமணி

மூலமும் - உரையும்.

இஃது

பலவித்வான்களாலியற்றப்பட்டதை

ஸ்ரீமான்

சூ. ப. நாதமுனி நாயுடு அவர்களால்,

பிழையற பரிசோதிக்கப்பட்டு,

சுத்தப்பிரதி 2-ம் பதிப்பு.

P. M. RAJOO MUDELIAR & SONS
RUBY PRESS,
PURASAWAKUM,
MADRAS.
14, SUNDRA PILLAY STREET

சென்னை - புரசை:

புலிப்பாக்கெட் பஞ்சாங்கம் பிரசுரஞ்செய்யும்

பூ. மு. இராஜு முதலியார் அவர்களது

ரூபி, அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1905.

இதின் விலை அணா 2.] [வி. பி. சார்ஜ் அணா 2.

நூதன புத்தகங்கள்.

நாலாயிரப்பிரபந்தம்	2	0	0
திருவிளையாடற்புராணவசனம் கிளேஸ் கடிதம் 64-சித்திரப்படங்களுடன்	1	8	0
பெரியபுராணவசனம் கிளேஸ் கடிதம் 90-சித்திரப் படங்களுடன்	1	8	0
பாக சாஸ்திரம்	1	0	0
திருவாய்மொழி	0	12	0
முதலாயிரம்	0	12	0
சைவ பாகசாஸ்திரம்	0	12	0
மிலிட்டேறி பாகசாஸ்திரம்	0	8	0
இல்லர சார சங்கிரகம்	0	8	0
மனமோகினி	1	0	0
சோதிடமர்மசாஸ்திரம்	0	8	0
ஜயம்பெற்ற சுந்தரவல்லிக்கதை	0	12	0
புலிப்பாக்கெட் பஞ்சாங்கம் சாதா	0	4	0
மேற்படி பென்சல்வைத்தது	0	6	0
விவேகசிந்தாமணி 2-ம பாகம் மூலம் உரை	0	4	0

ஒவ்வொரு புத்தகங்களுக்கும் புத்தகம் வாங்குகிறவர்களே தபாற்கூலி செலுத்தவேண்டும்.

இப்புத்தகங்கள் இன்னும் இதரமான புத்தகங்கள், அவிழ்தங்கள், ஜர்மன் சில்வர் சாமான்கள் வாசனை திரவியம் முதலியவைகள் தேவையானவர்கள் அடியில்கண்ட விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். கேட்லாக் தேவையானவர்கள் ½-அணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

பிரதாபமுதலியார் சரித்திரம்	1	0	0

பூ. மு. இராஜு முதலியார் அண்டு சன்ஸ்,

நபி, அச்சுக்கூடத் தலைவர்,

14, சுந்தரப்பிள்ளை வீதி,

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

சிவமயம்.

கணபதிதுணை.

விவேகசிந்தாமணி

மூலமும் - உரையும்.

கடவுள் வணக்கம்.

வெண்பா.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்துண் மேவுங்
கணபதியைக் கைதொழுதக் கால்.

(இதன் பொருள்.) திருவருணைக் கோபுரத்துள், எழுந்தருளப் பெற்ற விநாயகக்கடவுளை [பத்தியோடு] வணங்கி கரங்களால் அஞ்சலிசெய்யில், சகல துன்பங்களும் நீங்கும் வலிய ஆணவமலச் சேஷ்டையுமொழியும், இம்மையிற் றாய்வயிற்றிற் கருத்தரித்துப் பிறந்த தற்குக் காரணமாய் நின்ற சஞ்சித வினையகலும். இப்பிறப்பில் தேடப்பட்ட ஆகாமிய வினைகளும் போகும்—என்றவாறு.

ஆபத்துக் குதவாப் பிள்ளை யரும்பசிக் குதவா வன்னந்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திர மறியாப் பெண்டீர்
கோபத்தை யடக்கா வேந்தன் குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத தீர்த்தம் பயனில்லை யேழுந் தானே.

(இ-ள்) ஆபத்துக்கு உதவாப்பிள்ளையும், அரிய பசிக்கு உதவாத அன்னமும், தாகவெப்பத்தைத் தீர்க்காத தண்ணீரும், வறுமையறியாமல் [அதிகசெல்வ

செய்யும்] மனைவியும், கோபத்தைத் தணிக்காத அரசனும், ஆசிரியன் [உபதேசித்த] மொழிகளைக் கொள்ளாத மாணாக்கனும், பாவங்களைத் தீர்க்காத [புண்ணிய] தீர்த்தமும் ஆகிய இவ்வேழினாலும் பயனில்லை. க

பிள்ளைதான் வயதின்மூத்தாற் பிதாவின்சொற் புத்தி கேளான்
கள்ளினற் குழலாள் மூத்தாற் கணவனைக் கருதிப் பாரான்
தெள்ளற வித்தை கற்றாற் சீடனும் குருவைத் தேடான்
உள்ளநோய் பிணிக டீர்ந்தா லுலகர்பண் டிதரைத் தேடார்

(இ-ள்) மைந்தரும் வயது முதிர்ந்தபின் தந்தை சொற்புத்திகளைக் கேளார்கள், மது [மலர்க்] கூந்தலையுடைய மனைவியரும் முதிர்ந்தபின் தன் கணவர்களை மதிக்கமாட்டார்கள், மாணாக்கர்களும் தெளிந்து குற்றமறக் கல்வியைக் கற்றுக்கொண்டபின் ஆசிரியரைத் தேடார்கள், நோய் தீர்ந்தபின் உலகத்தினரும் வைத்தியரைத் தேடார்கள். உ

குக்கலைப் பிடித்து நாவிற் கூண்டினி லடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சள் பூசி மிகுமணஞ் செய்தா லுந்தான்
அக்குலம் வேற தாமோ வதினிடம் புனுகுண் டாமோ
குக்கலே குக்க லல்லாற் குலந்தனிற் பெரிய தாமோ.

(இ-ள்) புனுகுப்பூனை [வசிக்கத்தக்க] கூட்டினில் நாயைப்பிடித்து அடைத்துவைத்து, மேன்மையான மஞ்சள் முதலியவைகள் பூசி அதிக வாசனைகளை யூட்டினாலும் அது ஜாதியில் வேறாகுமோ? அதினிடம் புனுகுண்டாமோ? நாய் நாயாகுமல்லால் வேறு பெரிய ஜாதியாமோ? [ஆகா] ந

ஒப்புடன் முக மலர்ந்தே யுபசரித் துண்மை பேசி
உப்பில்லாக் கூழிட் டாலு முண்டதே யமிர்தமாகும்
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி யாகுந் தானே.

(இ-ள்) [யாவரும்] ஒப்பத்தக்க முகமலர்ச்சியோடு உபசாரஞ்செய்து உண்மையான மொழிகளைப் பேசி, உப்பில்லாக் கூழை வார்த்தாலும் [அது] உண்பவர்க்கு அமிர்தமேயாம். மா, பலா, வாழை முதலிய முப்பழவர்க்கங்களோடு [உயர்ந்த] அன்னத்தை [அன்பில்லாமல்] முகங்கடுத்து ஒருவர்க்கிடுவாராகில், அவையுண்பவர்க்கு உள்ள பசியினும், மிகுபசியை யுண்டாக்குமல்லாமல் தணிக்காது. ௪

கதிர்பெறு செந்நெல் வாடக் கார்குலங் கண்டு சென்று
கொதி திரைக்கடலிற் பெய்யுங் கொள்கைபோற் குவலயத்தே
மதிதனம் படைத்த பேர்கள் வாடினோர் முகத்தைப் பாரார்
நிதிமிகப் படைத்தோர்க் கீவார் நிலையிலாக்கிய மாட்டார்.

(இ-ள்) மேகக்கூட்டங்கள் சிறந்த நெற்பயிர்கள் [நீரின்றி] வாடக்கண்டும், அங்கு நீர்பொழியாது அலைகள் வீசாநின்ற சமுத்திரத்தினிடத்து பெய்யுந் தன்மைபோல, உலகத்தில் மதிக்கத்தக்க தனம் படைத்தவர்கள் அதிக நிதியுடையவர்க் கீவரல்லால், நிலையிலாது வாடினோர் முகங்கண்டு கொடுக்கார்கள். ௫

ஆலிலை பூவுங் காயு மளிதரு பழமு முண்டேல்
சாலவே பட்சி யெல்லாந் தன்குடி யென்றே வாழும்
வாலிபர் வந்து தேடி வந்திப்பார் கோடி கோடி
ஆலிலை யாதி போனா லங்குவந் திருப்பா ருண்டோ.

(இ-ள்) ஆலவிருட்சத்தினிடத்து இலை, பூ, காய், இனிமைதரும் பழம் முதலியவைகளிருந்தால், மிகுதியாகப் பலபட்சிகளும் தமது இருப்பிடம்போல் கூடிவாழும். இலை முதலியவை நீங்கி மரம் பட்டுநிற்கில் ஒரு பட்சியும் சேரா, அதுபோல மிகுந்த செல்வமிருக்கில் அளவிறந்தவர்கள் வந்துகூடி வந்தனம் செய்வார்கள், செல்வமில்லையேல் ஒருவருங் கூடார்கள். ௬

பொருட்பாலே விரும்புவர்கள் காமப்பா
லிடைமூழ்கிப் புரள்வர் கீர்த்தி
யருட்பாலா மறப்பாலைக் கனவிலுமே
விரும்பார்க ளறிவொன் றில்லார்
குருப்பாலக் கடவுளர்பால் வேதியர்பாற்
புரவலர்பாற் கொடுக்கக் கோரார்
செருப்பாலே யடிப்பவர்க்கு விருப்பாலே
கோடி செம்பொன் சேவித்தீவார்.

(இ-ள்) செல்வத்தினிடத்தே அதிக விருப்பங் கொள்பவர்கள், காமத்தினிடத்தே மூழ்கிப்புரள்வார்கள். அருளாகிய செல்வத்தைத்தரும் தருமத்தைக் கனவிலும் விரும்பார்கள். கொஞ்சமும் அறிவில்லாதவராய் ஆசாரியரிடத்தும் கடவுளிடத்தும் அந்தணர்களிடத்தும் அரசர்களிடத்தும், [ஒருபொருளும்] கொடுக்கக் கோரார்கள். கோடி செம்பொன்னாயினுந் தன்னைப் பாதரட்சையாற் சிக்ஷிப்பவர்க்கே ஆசையோடு வந்தனஞ் செய்து கொடுப்பார்கள்.

தண்டா மரையி னுடன்பிறந்துந் தண்டே னுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி யிருந்தாலு மறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற் கலப்பர் கற்றோரே.

(இ-ள்) தவளையானது தன்னுடன் பிறந்து வளர்ந்திருக்கும் குளிர்ந்த தாமரையிலுள்ள தேனை உண்ணவறியாது. காட்டிலிருந்த வண்டுகளோ வந்து அந்த மதுவையுண்டு களிக்கும். [அதுபோல] நெடுநாள் பழகியிருக்கினுங் கற்றோர் அருமையை அறிவிலார் அறியார், கற்றவரே அறிவர்.

அ

வானர மழைதனி னனையத் தூக்கணந்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமுங் கல்வியு நவின்ற நூல்களும்
ஈனருக் குரைசதிடி விடற தாகுமே.

(இ-ள்) முன்னமே பிரயாசையாற் கூடுகட்டிவசித்திருந்த ஓர் தூக்கணப்பட்சி, வீண்காலங்கழித்துத்திரிந்து வசிக்க இடமின்றி மழையில் நனைந்து வருந்திய ஒரு வானரத்தைக்கண்டு என்னைப்போல ஓர் இருப்பிடம் செய்துக்கொள்ளலாகாதா? என்றவுடனே, குரங்கு சினந்து அதன் கூண்டைப் பறித்தெறிந்தது போல, ஞானமும் கல்வியும் அறிவிலார்க் குரைத்திடில் துன்பமே உண்டாகும். ௯

தலைவன் தலைவியைப் புகழ்தல்.

வண்டுமொய்த் தளையகூந்தல் மதனபண் டாரவல்லி
கெண்டையோ டொத்தகண்ணாள் கிளிமொழி வாயினூறல்
கண்டுசர்க் கரையோதேனோ கனியொடு கலந்தபாலோ
அண்டர்மா முனிவர்க்கெல்லா மமுதமென் றளிக்கலாமே.

(இ-ள்) வண்டுகள் மொய்த்திருந்ததுபோன்ற கூந்தலையும். கயலையொத்த கண்களையும், கிளிமொழியொத்த சொல்லையும் உடைய மன்மத பொக்கிஷமென்னும் பெயரையுடைய கொடிபோன்றவளின் வாயினூறல் கற்கண்டோ, சர்க்கரையோ, தேனோ, பழத்தொடுகலந்த பாலோ, [அறியேம் ஆயினும்] தேவர் முனிவர்களுக்கெல்லாம், அமிர்தமென்றுகொடுக்கலாம். ௧௦

கற்பகத் தருவைச்சார்ந்த காகமு மமுதமுண்ணும்
விற்பன விவேகமுள்ள வேந்தரைச் சேர்ந்தோர்வாழ்வார்
இப்புவி தன்னிற்கிள்ளை யிலவுகாத் ததனைப்போல
அற்பரைச் சேர்ந்தோர்வாழ்வ தரிதரி தாகுமம்மா.

(இ-ள்) கற்பக விருட்சத்தை அடுத்த காகமும் அமிர்த முண்ணும், மிகுதியான அறிவுள்ள வேந்தரைச் சேர்ந்த [எளியவரும்] வாழ்வடைவார்கள் இலவவிருட் சத்தின காயைப்பார்த்துப் பழுக்கும் பழுக்குமென்று காத்திருந்து அபலமடையுங் கிளியைப்போல், அற பரைச் சேர்ந்தோருலகில் வாழ்வது அரிதினுமரிதா கும். [அம்மா வியப்பிடைச்சொல்.] கக

ஆலகால விடத்தையு நம்பலா
மாற்றையும் பெருங் காற்றையு நம்பலாங
கோலமாமத யானையை நமபலாங
கொல்லும் வேங்கைப் புலியையு நமபலாங்
காலனார்விடு தூதரை நம்பலாங்
கள்ளர் வேடர் மறவரை நம்பலாஞ்
சேலைகட்டிய மாதரை நம்பினாற்
றெருவினின்று தியககித் தவிப்பரே.

(இ-ள்) ஆலகாலவிடம், ஆறு, பிரசண்டக்காற்று, அழகிய பெரிய மதயானை, கொல்லத்தக்க வேஙகை, புலி, எமனுலே விடுந் தூதர்கள், கள்ளர், வேடர், மறவர், இத்யாதிபேர்களையும் நம்பினலும், சேலைகட்டிய [துன்மார்க்க] மங்கையரை [நம்பொணுது] நம்புவரேல் தெருவில்நின்று மயங்கித்தவிப்பார்கள்.

சஙகுவெண் டாமரைக்குத் தந்தைதா யிரவிதண்ணீர்
அஙகதைக் கொய்துவிட்டா லழுகசசெய் தந்நீர்கொல்லுந்
துங்கவண் கரையிற்போட்டாற சூரியன் காய்ந்துகொல்வான்
தங்களி னிலைமைகெட்டா லிப்படித் தயஙகுவாரே.

(இ-ள்) சங்குபோலும் வெள்ளைத் தாமரைக்குச் சூரியனும், தண்ணீரும், பிதாமாதாக்களாக விருக்கினும், அத்தாமரையைக் கொய்துவிடில் அந்நீரே யதனை அழுகச்செய்து கொல்லும், கரையில்விடில் சூரியன்

காய்ந்துகொல்வான், அதுபோலத் தங்கள் நிலைவிட்டுப் பெயர்ந்தவர்கள் இவ்விதம வருந்துவார்கள்.

நாய்வாலை யளவெடுத்துப் பெருக்கித்தீட்டி
னற்றமிழை யெழுதவெழுத தாணியாமோ
பேய்வாழுஞ் சுடுகாட்டைப் பெருக்கித்தள்ளிப்
பெரியவிளக் கேற்றிவைத்தால் வீடதாமோ
தாய்வார்த்தை கேளாத சகசண்டிக்கென்
சாற்றிடினு முலுத்தகுணந் தவிரமாட்டான்
ஈவாரை யீயவொட்டா னிவனுமீயா
னெழுபிறப்பி னுங்கடையா மிவன்பிறப்பே.

(இ-ள்) நாயினது வாலை [எழுத்தாணி இலக்கணப்படி நீட்டித்தீட்டினாலும்] நல்ல தமிழ் எழுத்துக்களை எழுதுங் கருவியாகுமா? பேய்கள்வாழுஞ் சுடுகாட்டைக் கூட்டித்தள்ளி பெரிதாகிய விளக்கேற்றி வைத்தாலும் வாசஞ்செய்தற்குறிய வீடாகுமா, தாய்மொழிகேளாத சகசண்டிக்கு எவ்விதம் உரைக்கினும் உலோபகுணத்தை விடமாட்டான் கொடுப்பவரையுங் கொடுக்கவொட்டான். இவன் ஜென்மம் எழுவகைபிறப்பினும் ஈனத்துவமடைந்த கடைஜன்மமேயாகும்.

வெம்புவாள் விழுவாள்பொய்யே மேல்விழுந்தழுவாள்பொய்யே
தமபலந் தின்பாள் பொய்யே சாகினறே னெனபாள் பொய்யே
அம்பிலுங் கொடிய கண்ணா ளாயிரஞ் சிந்தையாளை
நம்பின பேர்க ளெல்லாம் நாயினுங் கடையா வாரே.

(இ-ள்) தியங்குவள் விழுவள் மேல்விழுந்தழுவள் [உரித்தானவள்போல] எச்சிற்றம்பலத்தையுமுண்பள் [உன்னுடனே கூட] இறப்பேனென்பள் [இவையாவும்] பொய்யே, இவ்வித ஜாலங்களமைந்த துரோகசிந்தனைகளையுடைய அம்பினுங்கொடுஞ் செய்கைகளைக்காட்டுங் கண்களையுள்ள மங்கையரை [வேசியரை] நம்பின

வர்களெல்லாம் [மலமுண்ணும்] நாயினுங்கீழ்ப்பட்டவ ரேயாவர். கரு

கெற்பந்தான் மங்கையருக் கழகுகுன்றுங்
கேள்வியில்லா வரசனு லுலகம்பாழாந்
துற்புத்தி மந்திரியா லரசுக்கீனஞ்
சொற்கேளாப் பிள்ளைகளாற் குலத்துக்கீனம்
நற்புத்தி கற்பித்தா லற்பர்கேளார்
நன்மைசெய்யத் தீமையுட னயந்துசெய்வார்
அற்பரோ டிணங்கிவிடிற் பெருமைதாழு
மரியதவங் கோபத்தா லழிந்துபோமே.

(இ-ள்) மங்கையருக்கு கருப்பத்தால் அழகு குறையும். [நியாயமுறை] விசாரியாத அரசனால் உலகு பாழாகும். இராஜாங்கத்துக்கு துற்புத்தியுள்ள மந்திரிகளால் கெடுதியுண்டாகும். அறிவிலார்க்கு நல்ல புத்திகளைச் சொன்னாலுங் கேளார். நன்மைசெய்பவர்க்கு உடனே தீமையையே பாரட்டிச் செய்வார். [இவ்விதமான] சிறியவர்களோடு கூடினவர் மகிமை குறையும். கோபத்தினால் அருமையாகிய தவங்களும் சிதைந்து போம். கசா

தன்னுடன் பிறவாத்தம்பி தனைப்பெறாத் தாயாதந்தை
அன்னிய ரிடத்துச்செல்வ மரும்பொருள் வேசியாசை
மன்னிய வேட்டின்கல்வி மறுமனை யாட்டிவாழ்க்கை
இன்னவாங் கருமமாறு மிடுக்கத்துக் குதவாவன்றே.

(இ-ள்) உடன்பிறவாத சகோதரன், தன்னைப் பெறாததாய்தந்தையர், மற்றோரிடத்திலுள்ள செல்வம், பொருளிச்சைகொண்ட வேசியராசை, ஏட்டிலெழுதியிருக்குங் கல்வி, அயலான் மனைவியோடுகூடிய வாழ்க்கை இந்த ஆறு வகைகளும் தக்க சமயத்துக்கு உதவமாட்டா. கஎ

ஒருநான்கு மீரரையு மொன்றேகேளா
　　யுண்மையா யையரையு மரையுக்கேட்டேன்
இருநான்கு மூன்றுடனே யொன்றுஞ்சொல்லா
　　யிமமொழியைக் கேட்டபடி யீந்தாயாயின்
பெருநான்கு மறுநான்கும் பெறுவாய்பெண்ணே
　　பின்னையோர் மொழிபுகல வேண்டாமின்றே
சரிநான்கும் பத்துமொரு பதினைந்தாலே
　　சகிக்கமுடி யாதினியென் சகியேமானே.

(இ-ள்) ஆறாவதுராசி கன்னி, மூன்றாவது நாள் செவ்வாய், பனிரண்டாவது நட்சத்திரம் உத்திரம், இருபத்தெட்டாவது வருடம் ஜெய, இருபத்தொன்பதாவது ஆண்டு மன்மத. [கருத்து] கன்னியே உன் செவ்வாயைக் கேட்டேன் ஒருத்திரம் சொல்லாய், கேட்டபடி கொடுப்பாயாகில் ஜெயம் பெறுவாய், வேறுபுகன் மொழி சொல்லக்கூடாது மன்மதவேதனை யினி பெண்ணால் சகிக்கமுடியாது மானே இஃது ஓர் விரகமுற்றோன் கூறியது. கஅ

தேனுகா வண்டு மதுதனை யுண்டு
　　தியக்கியே கிடந்ததைக் கண்டு
தானதைச் சப்பு வினைகனி யென்று
　　தடங்கையா லெடுத்து முன் பார்த்தாள்
வானுறு மதியம் வந்ததென றெண்ணி
　　மலர்க்கரங் குவியுமென் றஞ்சிப்
போனது வண்டோ பரந்ததோ பழந்தான்
　　புதுமையோ விதுவெனப் புகன்றாள்.

(இ-ள்) தேனையுண்ணத்தக்க வண்டுகள் அந்த மதுக்களையுண்டு, மயங்கிக் கிடந்ததைக்கண்ட [ஒரு பெண்] அதை நாவற்பழமென்று விசாரித்து தனது கையாலெடுத்துப் பார்த்தாள். அவ்வண்டு [அவள் முகத்தினழகால்] ஆகாயத்தின்கண்ணுள்ள சந்திரன் வந்த

தென்று நினைத்து அதனால் அவள் கரமாகிய தாமரை மலர் மூடிக்கொள்ளுமென்று பயந்து பறந்தது, பின்பு அம்மங்கை பறந்துபோனது வண்டோ? பழமோ? அல்லது யாது புதுமையோவென்று ஐயமுற்றுச்சொன்னாள். [இது ஒரு ஸ்திரீயின் முகத்தையுங் கரத்தையும் வியந்து கூறியது.]

கருதியநூல் கல்லாதான் மூடனாகுங்
  கணக்கறிந்து பேசாதான் கசடனாகும்
ஒருதொழிலு மில்லாதான் முகடியாகும்
  ஒன்றுக்கு முதவாதான் சோம்பனாகும்
பெரியோர்கண் முன்னின்று மரத்தைப்போலும்
  பேசாம லிருப்பவனே பேயனாகும்
பரிவுசொலித் தழுவினவன் பசப்பனாகும
  பசிப்பவருக் கிட்டுண்ணான் பாவியாமே.

(இ-ள்) மதிக்கத்தக்க நல்ல சாஸ்திரங்களைக் கல்லாதவன் மூடன், அளவறிந்து பேசாதவன் கசடன், ஒரு தொழிலுமில்லாதவன் மூதேவி, ஒன்றுக்குமுதவாதவன் சோம்பன், மரம்போல வணங்காது அறிவுடையோர் முன்பாகநின்று துதியா திருப்பவனே பேயன், [அன்பின்றி] அன்புபோற்காட்டித் தழுவுகின்றவன் பசப்புகின்றவன், பசியாளர்களுக்குக் கொடுத்துண்ணாதவன்பாவி. 20

தாங்கொணா வறுமைவந்தாற் சபைதனிற் செல்லநாணும்
வேங்கைபோல் வீரங்குன்றும் விருந்தினர் காணநாணும்
பூங்கொடி மனையாட்கஞ்சும் புல்லருக் கிணககஞ்செயயும்
ஓங்கிய வறிவுகுன்று முலகெலாம் பழிக்குந் தானே.

(இ-ள்) பொறுப்பதற்கரிய தரித்திரம் [ஒருவனுக்கு] வந்தால் சபையிற்செல்ல வெட்கமாம். வேங்கைப் புலிபோ லுள்ள வீரமுங் குறையும். விருந்ினரைப்

பார்க்கவும் வெட்கமுண்டாம். புட்பக்கொடி போன்ற இடையையுடைய] தன்மனைவிக்கும் பயப்பட வேண்டி வரும். அற்பர்களோடு கூட்டுறவுண்டாம். மேன்மேலும் வளரத்தக்க அறிவும் குறையும். உலகமெல்லாம் பழித்தற்கிடமுண்டாம். உக

அரும்பு கோணிடி லதுமணங் குன்றுமோ
கரும்பு கோணிடிற் கட்டியும் பாகுமாம்
இரும்பு கோணிடில் யானையை வெல்லலாம்
நரம்பு கோணிடில் நாமதற் கென்செய்வோம்.

(இ-ள்) புட்பத்தினரும்பு கோணலாயிருந்தாலும், அதின்மணம் குறையுமோ ? குறையா; கரும்பு கோணலாயிருந்தாலும் வெல்லமும் பாகுமாகும். இரும்பு கோணலானால் பெரிய மதயானையையும் ஜயிக்கலாம். [தேக] நரம்புகள் கோணில் [சிரியாணதிசை ஒருவற்கெய்தில்] நாமென்ன சேய்வோம். உஉ

வேசி தன் தோழியை வினவுதல்.

அன்னையே யனையதோழி யறந்தனை வளர்க்குமாதே
உன்னையோ ருண்மைகேட்பே னுரைதெரிந் துரைத்தல்வேண்
என்னையே புணருவோர்க ளெனக்குமோ ரின்பநல்கிப் [டும்
பொன்னையுங் கொடுத்துப்பாதப் போதினில் வீழ்வதேனோ.

(இ-ள்) தாய்போலுங் கருணையுள்ள பாங்கியாகிய தருமகுணமுள்ள பெண்ணே ? உன்னிடத்தில் ஒருண்மை கேட்கின்றேன், அதைத் தெரிந்து சொல்லவேண்டும். அதாவது, என்னிடத்து கலவியை விரும்பினவர்கள் எனக்கும் இன்பத்தைக்கொடுத்துப் பொருளையுங் கொடுத்து எனது மலர்போன்ற காலில்வீழ்கின்றார்கள், யாது காரணம் ? உ௩

தோழி விடைதரல்.

பொம்மெனப் பணைத்துவிம்மிப் போர்மதன் மயங்கிவீழுங்
கொம்மைசேர் முலையினளே கூறுவேனொன்று கேண்மோ
செம்மையி லறஞ்செய்யாதார் திரவியஞ் சிதறவேண்டி
நம்மையுங் கள்ளுஞ்சூதும் நான்முகன் படைத்தவாறே.

(இ-ள்) பொலிவாகிப்பருத்து, விம்முதலுற்று,வலி மையுள்ள மன்மதனையும் மயங்கச்செய்யும் வட்டவடிவான தனத்தையுடையவளே ? ஒன்றுசொல்லுகிறேன் கேட்பாயாக, செவ்வையாக தருமஞ்செய்யாதவர்கள் பொருள்களெல்லாஞ் சிதறுதலடையும் பொருட்டே நம்போன்ற வேசியரையும, கள்ளையும், சூதாடுதலையும், பிரமதேவன் படைப்பித்திருக்கிறான்.

இவ்விரண்டு செய்யுட்களு'ம ஒருதொடர். உச

பொன்னொடு மணியுண்டானாற் புலையனுங் கிளைஞனென்று
தன்னையும் புகழ்ந்துகொண்டு சாதியின் மணமுஞ்செய்வா
மன்னரா யிருந்தபேர்கள் வகைகெட்டுப் போவாராயின்
பின்னையு மாரோவென்று பேசுவா ரேசுவாரே.

(இ-ள்) பொருளும புகழும் ஒருவனுக்கு உண்டானால் அவன் புலையனாகினும், தன் சுற்றத்தானென்று புகழ்ந்துகொண்டு உயர்ந்த சாதியிலும் மணமுடிப்பார்கள். அரசராயிருந்தவரும் யாதொரு வழியுமின்றிக் கெட்டுப் போவாராகில் அவரை யாரோவென்று இகழ்ச்சி பேசுவார்கள். உரு

வேதமோதிய வேதியர்க் கோர்மழை
நீதிமன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர்கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாதமூன்று மழையெனப் பெய்யுமே.

(இ-ள்) வேதமோதுகின்ற அந்தணருக்கு ஒரு மழை, நீதிவழிதப்பாத அரசர்களுக்கு ஒரு மழை, அழகிய கற்பிற் சிறந்த மங்கையருக்கு ஒரு மழையாக ஒவ்வொரு மாதத்திலும் மூன்றுமழை வருஷிக்கும். உசு

அரிசிவிற்றிடு மந்தணர்க் கோர்மழை
வரிசைதப்பிய மன்னருக் கோர்மழை
புருஷனைக்கொன்ற பூவையர்க் கோர்மழை
வருஷமூன்று மழையெனப்பெய்யுமே.

(இ-ள்) [தற்காலம்] அரிசி விற்பனைசெய்கின்ற பிராமணர்களுக்கு ஒரு மழை, நியாயந்தவறிய ராஜர்களுக்கு ஒரு மழை, கணவனைக்கொல்லும் பெண்களுக்கு ஒரு மழையாக ஒவ்வொரு வருடத்திலும் மூன்று மழை பொழிகின்றன. உஎ

இருப்பதி மிதியாப் பாதஞ் சிவனடி வணங்காச் சென்னி
இரப்பவர்க் கீயாக் கைக ளினியசொற் கேளாக் காது
புரப்பவர் தங்கள் கண்ணீர் பொழிதரச் சாகாத் தேகம்
இருப்பினும் பயனென் காட்டி லெரிப்பினு மில்லைதானே.

(இ-ள்) ஸ்ரீ சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திவ்யக்ஷேத்திரங்களை மிதியாதான் பாதமும், சிவபெருமானுடைய பாதத்தை வணங்காதான் தலையும், யாசிப்பவர்க்குக் கொடாதான் கைகளும், இனிமையான சொற்களைக் கேளாதான் செவியும், தங்களை இரட்சிக்கின்றவர்கள் கண்களிலிருந்து ஜலமொழுகப் பார்த்தும் உயிர்கொடாதான் தேகமும், இருந்தும் பயனென்ன? காட்டில் வைத்து எரித்திடினும் பயனில்லை. உஅ

தன்னுடலை தனக்கொன்றீந்தால் தக்கதோர் பலமதாகும்
மின்னியல் வேசிக்கீந்தால் மெய்யிலே வியாதியாகும்
மன்னிய வுறவுக்கீந்தால் வருவது மயக்கமாகும்
அன்னிய பரத்துக்கீந்தா லாருயிர்க் குதவியாமே.

(இ-ள்) தன் தேகத்துக்கு ஒன்றைக்கொடுக்கில் அதற்குத்தக்க பலமுண்டாகும். மின்னலைப்போல அன்பைக்காட்டி மறைக்கும் இயல்புள்ள வேசையருக்குக் கொடுத்தால் தேகத்திற் பிணியுண்டாகும். பொருந்திய உறவினருக்குக் கொடுத்தால் மனமயக்கமே வருவதாகும். அன்னியருக்குக் கொடுத்தால் சார்ந்த உயிர்த்துணையாகும். உசு

படியினப்பொழு தேவலைத்திடு பச்சைநாவியை நம்புலாம்
பழிகமக்கென வழிமறித்திடு பழையநீலியை நம்பலாங்
கொடுமதக்குவ டெனவளர்ந்திடு குஞ்சரத்தையு நம்பலாங்
குலுங்கப்பேசி நகைத்திடுஞ்சிறு கும்பர்தம்மையு நம்பலாங்
கடையிலக்கமு மெழுதிவிட்ட கணக்கர்தம்மையு நம்பலாங்
காக்கைபோல்விழி பார்த்திடுங்குடி காணியாளரை நம்பலாம்
நடைகுலுக்கியு முகமினுக்கியு நகைநகைத்திடு மாதரை
நம்பொணதுமெய்நம்பொணதுமெய்நம்பொணதுமெய்காணுமே

(இ-ள்) உலகத்தில் உண்டபொழுதே கொல்லத்தக்க விஷத்தையும், பழியைக்கருதாது ஓர் வணிகனை வழிமறித்துக்கொலைசெய்த பழையனூர் நீலியையும், கொடியமும்மதங்களை யுடைய மலைபோன்று வளர்ந்திராநின்ற யானையையும், குலுக்கிப்பேசிச் சிரித்து ஏமாற்றும் யௌவனச் சிறுவரையுப், குடிகளுக்குக் கணக்கின் உள்வயணத்தைக் காட்டாமல் மோசவகையாய் தான் எழுதிவைத்த கட்டுத்தொகையைக்காட்டி வஞ்சிக்குங் கணக்கர்களையுப், ஒரே விழியையுடையதாயிருந்து கூரியபார்வையை யுடையதான காக்கையைப் போலப் பயிரிடுங் குடிகளுக்கு யாதொரு ஆதாயமுங் கிட்டாதபடி கட்டிக்காக்கும் காணியாட்சியையுடையவரையும் நம்பலாகும். நடக்கும்போதே குலுக்கியும்,

முகத்தை மஞ்சள் முதலியவற்றால் மினுக்கியும் பற்கள் வெரிய நகைத்தும் திரிகின்ற மாதர்களை நம்பக்கூடாது. உண்மை! உண்மை!! உண்மை!!! ௩௰

வண்டுகளிருந்திடின் மதுவையுண்டிடுந்
தண்டமிழிருந்திடிற் சங்கஞ்சேர்ந்திடுங்
குண்டுணியிருந்திடிற் கோள்கள்மிஞ்சிடும்
பெண்டுகளிருந்திடிற் பெரியசண்டையாம்.

(இ-ள்) வண்டுகளிருந்தால் தேனையுண்ணும், அழகியதமிழிருந்தால் அநேகங் கூட்டத்தினர் உறவுண்டாம், குண்டுணிகளிருந்தால் கோள்களே மிகுதியுண்டாம், பெண்கள் பலர் கூடியிருந்தால் பெரிய சண்டைச்சச்சரவுகளுண்டாம். ௩௧

கற்புடை மாதர்கொங்கை கவரிமான் மயிரின்கற்றை
வெற்புறு வேங்கையின்றோல் வீரன்கை வெய்யகூர்வேல்
அற்பர்தம் பொருள்கடாமு மவரவ ரிறந்தபின்னே
பற்பலர் கொள்வாரிந்தப் பாரினி லுண்மைதானே.

(இ-ள்) கற்புள்ள பெண்களின் ஸ்தனம், கவரிமான் மயிர்முடி, மலையிலுள்ள வேங்கையின்தோல், சுத்தவீரர்களின் கையிலுள்ள வேல், அற்பர்களிடத்திலுள்ள பொருள், இவை யாவும் அவரவர் உயிர் நீங்கிய பின்னே பலருங் கைக்கொள்வார்கள். இவை உலகத்தில் சத்தியமே. ௩௨

வீணர்பூண் டாலுந்தங்கம் வெறும்பொய்யே மேற்பூச்சென்பார்
பூணுவார் தராப்பூண்டாலும் பொருந்திய தங்கமென்பார்
காணவே பனைக்கீழாப்பாற் குடிக்கினுங் கள்ளேயென்பார்
மாணுலகத்தோர்புல்லர் வழங்குரை மெய்யென்பாரே.

(இ-ள்) அற்பர்கள் தங்கத்தை அணிந்திருந்தாலும் கண்டவர்கள் தங்கமல்ல மேற்பூச்சென்பார்கள்.

பூணத்தக்க செல்வர்கள் [தரா]பித்தளை முதலிய நகைகளை யணிந்திருந்தாலும் உயர்ந்த தங்கமென்பார்கள். பலரும் பார்க்கப் பனைநிழலிலிருந்து பாலைக்குடித்தாலும் கள்குடித்தானென்பார்கள். பெருமைதங்கிய உலகத்தோர் அறிவீனருரைக்கும் மொழிகளையே மெய்யென்பார்கள். ௩௩

ஓரியே மீனுவந் தூனிழந்தையோ
காரியே கண்பிழை காட்டி யில்லையோ
பாரி யகணவனைப் பழுது செய்துநீ
நீரிலேயிருப்பது நிலைமை யல்லவே.

(இ-ள்) கணவனை இகழ்ந்து நீங்கிவந்த ஒரு பெண் ஓ நரியே! ஓர் மீனை இச்சித்து வாயிலிருந்த உணவையிழந்தனையேயாது காரணமென்ன! அந்நரி ஓ பெண்ணே! ஏதேனும் தவறுதல் உலகத்திலில்லையா! நீயோ பெருமைதங்கிய புருடனையிகழ்ந்து நீ இத்தன்மையிலிருப்பது உன் தன்மைக்கழகல்லவே என்றது. ௩௪

சம்புவே யென்னபுத்தி சலந்தனின் மீனைநம்பி
வம்புறு வடத்தைபோட்டு வானத்தைப் பார்ப்பதேனோ
அம்புவி மாதேகேளா யரசனை யகலவிட்டு
வம்பனைக் கைபிடித்த வாறுபோ லாயிற்றன்றே.

(இ-ள்) நரியே என்ன மதியால் ஜலத்திற்றுள்ளிய மீனை நம்பி, நாற்றமுள்ள மாமிசத்துண்டையிழந்து ஆகாயத்தை எட்டிப்பார்க்கின்றனை? யாது காரணமென்று கேட்ட பெண்ணைப்பார்த்து, அந்த நரி உலகத்தில் மெச்சத்தக்க பெண்ணே! தன் நாயகனாகிய அரசனை யகலவிட்டு மற்றொரு புருஷனைக் கைப்பிடித்த வாறுபோலாயிற்றென்றறிவாயாக வென்றது. ௩௫

மூப்பிலாக் குமரிவாழ்க்கை முனையிலா வரசன்வீரங்
காப்பிலா விளைந்தபூமி கரையிலா திருந்தவேரி
கோப்பிலான் கொண்டகோலங் குருவிலான் கொண்டஞானம்
ஆப்பிலாச் சகடுபோலே யழியுமென் றுரைக்கலாமே.

(இ-ள்) தனக்கு மூத்தோரில்லாமற் றனியேவாழும் பாலியப்பெண் வாழ்வும், கோபமில்லாத அரசன் வீரமும், காத்தலில்லாமல் விளைந்த பூமியும், கரையில்லா திருந்த ஏரியும், தன்னிடம் வேண்டியவைக ளமைதலில்லாதவன் கொள்ளும் இடம்பமும், ஆசாரியனில்லாதவன் கொண்ட ஞானமும ஆகிய இவையாவும் அச்சாணியில்லாத வண்டிபோல் அழிந்துபோமென்று சொல்லலாம். ௩௬

பொன்னின்மணி கிண்கிணி சிலம்பொலி புலம்ப
மின்னுமணி மேகலைகள் மெல்லென வொலிப்பச்
சின்னமலர் கொண்டுசில சேடியர்கள் சூழ
அன்னமென வல்லவென வாவென வுரைத்தார்.

(இ-ள்) பொன்மணிகளும், சதங்கை மணிகளும், சிலம்புகளுஞ் சப்திக்க, பிரகாசிக்கின்ற மணிமேகலைகள் மெதுவாய் ஒலிக்க, அரும்புமலர்களைக்கொண்டு சில பாங்கியர்கள் சூழ்ந்து வர நடக்கின்றவள் அன்னமோ; அல்லவோவென்று கண்டோர் கூறினர் [ஒரு பெண்நடையைப்பற்றிக்கூறியது.] ௩௭

கானலை நீரென்றெண்ணி கடுவெளி திரியுமான்போல்
வானுறு மிலவுகாத்த மதியிலாக் கிள்ளையேபோல்
தேனினைக் கண்டுதும்பி தியங்கிய தகைமையேபோல்
நானுனை யரசென்றெண்ணி நாளையும் போக்கினேனே.

(இ-ள்) கானலைத் தண்ணீரென்று நினைத்து வெட்டவெளியில் ஓடித்திரியும் மான்போலவும், பழுக்குமென்று இலவவிருக்ஷத்தைக்காத்த அறிவில்லாத கிளி...

யைப்போலவும் கள்ளையுண்டுமயங்கிய வண்டுபோலவும், நானுன்னை ராஜனென்று கருதி நாளை வீணுகப்போக்கினேன். ௫அ

தலைவனைப்பிரிந்த தலைவி வருந்தல்.

சங்குமுழங்குந் தமிழ்நாடன் றன்னைநினைந்த போதெல்லாம்
பொங்குகடலு முறங்காது பொழுதோராநாளும் விடியாது
திங்களுறங்கும் புள்ளுறங்குந் தென்றலுறங்குஞ் சிலகாலம்
எங்குமுறங்கு மிராக்கால மென்கண்ணிரண்டு முறங்காதே.

(இ-ள்) சங்குகள் முழங்காநின்ற எனது தமிழ் நாட்டதிபனை நினைக்கும்போதெல்லாம் அலைகள் வீசாநின்ற சமுத்திரமும் தூங்குவதில்லை. பொழுதும் விடிகிறதில்லை. சந்திரனும் அன்றில் குயில் முதலிய பட்சிகளும், தென்றற்காற்றும் சில காலந்தூங்கும். பேய்முதலிய சகல பிராணிகளும் தூங்கத்தக்க இராக்காலத்தில் யாது காரணமோ என் கண்கள்மட்டும் உறங்குவதில்லை. ௫௯

அரவினை யாட்டுவாரு மருங்களி றாட்டுவாரும்
இரவினிற் றனிப்போவாரு மேரிநீர் நீந்துவாரும்
விரைசெறி குழலியான வேசையை விரும்புவாரும்
அரசனைப் பகைத்திட்டாரு மாருயி ரிழப்பர்தாமே.

(இ-ள்) பாம்பாட்டுகிறவர்களும், அரிய யானைப்பாகர்களும், இராத்திரியில் தனிவழி செல்கின்றவர்களும், ...டாக ஜலத்தில் நீந்துகின்றவர்களும், வாசனைநிறைந்த ...டய வேசியரை இச்சிக்கின்றவர்களும், அர...கைத்துக் கொண்டவர்களும், பொருந்திய ...ப்பார்கள். சo

வாழ்வது வந்தபோது மனந்தனின் மகிழவேண்டாந்
தாழ்வது வந்ததாலுற் றளர்வரோ தக்கோர்மிக்க
ஊழ்வினை வந்ததாலொ லொருவரால் விலக்கப்போமோ
ஏழையா யிருந்தோர்பல்லக் கேறுதல் கண்டிலீரோ.

(இ-ள்) வாழ்வு வந்தகாலத்திலே மனதில் மகிழ்ச்சியை வைக்கக்கூடாது. தாழ்வு வந்ததென்று வருந்தவுங்கூடாது. இது மேலானவர்கள் செய்கை. ஊழ்வலியால்வரும் செய்கைகளை யாரால் விலக்கலாம். ஏழையாயிருந்தவர்கள் உடனே சிவிகையிலேறத்தக்க செல்வான்களாதலை நீங்கள் பார்த்ததில்லையா! . சக

பருப்பதங்கள் போனிறைந்திடு நவமணிப் பலன்களைக்கொடுத்தாலும்
விருப்பநீங்கிய கணவரைத்தழுவுதல் வீணதாம் விரையார்ந்த
குருக்குசந்தனக் குழம்பினையன்பொடு குளிர்தர வணிந்தாலும்
செருக்குமிஞ்சிய வற்பர்தந்தோழமை செப்பவு மாகாதே.

(இ-ள்) மலைகளைப்போலக் குவியல் குவியலாக ஒன்பது வகை இரத்தினங்களையும் பலனுகக்கொடுத்தாலும், விருப்பமில்லாத கணவரைக்கூடுதல் வீணேயாம். வாசனைபொருந்திய மிகுந்த செருக்குடைய அற்பர்கள் சந்தனக்குழம்பை ஆசையோடு குளிர்ச்சிதரப் பூசினுலும் அவர்கள் சிநேகத்தை வாயினுல் சொல்லவுங்கூடாது, சரு

பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடில்
உருத்தெரி யாமலே யொளிமழுங்கிடும்
மருந்துளதோ வெனில் வாகடத்திலை
தரித்திரமென்னுமோர் மருந்திற் றீருமே.

(இ-ள்) [ஒருவனுக்கு] பெருத்த செல்வச்செருக்கென்னும் வியாதிவந்து கூடினுல், உருவந்தெரியாமலே கண்ணொளிமழுங்கிவிடும். இதற்கு மருந்துளதோ

ன்று ஆராயில் வயித்தியர் கூறிய வாகடங்களிலில்லை, தரித்திரமென்றுசொல்லத்தக்கமருந்தினல் உடனேதீரும்.

அத்தியின் மலரும்வெள்ளை யாக்கைகொள் காக்கைதானும்
பித்தர்தம் மனமுநீரிற் பிறந்தமீன் பாதந்தானும்
அத்தன்மால் பிரமதேவ னுலள விடப்பட்டாலுஞ்
சித்திர விழியார்நெஞ்சந் தெரிந்தவ ரில்லைகண்டீர்.

(இ-ள்) அத்திமரத்தின் பூவையும், வெள்ளைநிறங்கொண்ட காக்கையையும், பயித்தியக்காரர் மனதையும், ஜலத்திற்பிறந்த மச்சங்களின் பாதத்தையும், சிவன் விஷ்ணு பிரமதேவன் முதலியவர்களால் அளவிடப்பட்டு ஓர்வேளை கண்டறிந்தாலும், சித்திரத்தையொத்த கண்களையுடைய பெண்களின் நெஞ்சத்தின் கருத்தைக்கண்டு தெரிந்தவர்கள் உலகத்திலில்லை.

சொல்லுவார் வார்த்தைகேட்டுத் தோழமை யிகழ்வார்புல்லர்
நல்லவர் விசாரியாமற் செய்வரோ நரிசொற்கேட்டு
வல்லியம் பசுவுங்கூடி மாண்டதோர் கதையைப்போல
புல்லிய ரொருவராலே போகுமே யாவுநாசம்.

(இ-ள்) அற்பர்கள் பிறர்சொல்லும் வார்த்தைகளைக்கேட்டுச் சிநேகத்தை இகழ்வார். மேலானவர்கள் நன்றாய் விசாரியாமல் ஒன்றையும் செய்வரோ? செய்யார். ஓர் நரியினதுசொல்லைக்கேட்டு ஒரு புலியினிடத்துப் பசு சேர்ந்து இறந்துபோன கதையைப்போல அறிவீனராலே யாவும் நாசமாய்ப்போம் [இக்கதைபஞ்சதந்திரத்திலுள்ளது] ௨௫

கதலிவீரர் களத்திடை வையினுங்
குதலைவாயிற் குழவிகள் வையினும்
மதனலீலையின் மங்கையர் வையினும்
இதமுறச்செவிக் கின்பம் விளையுமே.

(இ-ள்) விருதுகளைப்பெற்ற சுத்தவீரர்கள் யுத்தகளத்தினிடத்துத் திட்டினாலும், மழலைச்சொற்களையுடைய குழந்தைகள் வைதாலும், மன்மத லீலாவினோதக் கலவியில் மங்கையர்கள் நிந்தித்தாலும், இனிமையுறச் செவிக்கு இன்பமே உண்டாகும். ௨௬

புத்திமான் பலவானவான் பலமுளான் புத்தியற்றால்
எத்தனை விதத்தினாலு மிடரது வந்தேதீரும்
மற்றொரு சிங்கந்தன்னை வருமுயல் கூட்டிச்சென்றே
உற்றதோர் கிணற்றிற்சாயல் காட்டிய வுவமைபோலாம்.

(இ-ள்) ஓர் சிங்கத்தை ஒரு முயல் கூட்டிக்கொண்டுபோய் ஓர் கிணற்றில் அதன் சாயலைக் காட்டிக்கொன்ற உவமைக்கதைபோல, எவ்வளவு வீரத்தன்மையுள்ளவனும், புத்தியில்லாவிடில் எந்தவிதத்தினாலும் அவனுக்குத் துன்பமே வந்துசேரும். ஆதலால் புத்தியுள்ளவனே பலவான் [இதிற்குறித்தகதை பஞ்சதந்திரததிலுள்ளது] ௨௭.

மானமுள் ளோர்கடன்றோர் மயிரறி னுயிர்வாழாத
கானுறு கவரிமான்போற் கனம்பெறு புகழேபூண்பார்
மானமொன் றில்லார்தாமு மழுங்கலாய்ச் சவங்கலாகி
ஈனமாங் கழுதைக்கொப்பா யிருப்பரென் றுரைக்கலாமே.

(இ-ள்) தன்னிடத்துள்ள ஓர் மயிர் அறுந்தாலும் உயிரைவிடுகின்ற கவரிமானைப்போல் மானமுள்ளவர்கள் எப்பொழுதும் புகழையே விரும்புவார்கள். மானமில்லாதவர் புத்திமழுங்கிச் சவங்கலாகி யீனமடைந்த கழுதைக்கொப்பாய் இருப்பர். ௨௮

கழுதைகாவெனக் கண்டுநின் றாடிய வலகை
தொழுதுமீண்டுமக் கழுதையைத் துதிசெய வதுதான்
பழுதிலாநமக் காரிகராமெனப் பகரும்
முழுதுமூடரை மூடர்கொண்டாடிய முறைபோல்.

(இ-ள்) அறிவில்லாத மூடர்களை அவரினுந் தாழ்ந்த முழு மூடர்கள் கொண்டாடிப் புகழ்வது எவ்வாறெனில், ஒரு கழுதை காவென்று கத்தியதைப் பார்த்து, அதற்கிசைய நின்றாடிய ஓர் பிசாசு திரும்பவும் அந்தக் கர்த்தபத்தை வணங்கித் துதிசெய்ய அது குற்றமில்லாக் குரலையுடைய நமக்கு ஒப்பானவர்கள் யாரெனச் சொல்வதுபோலிருக்கும். சசு

ஆசாரஞ் செய்வாராகி லறிவொடு புகழுமுண்டாம்
ஆசார நன்மையாலு லவனியிற் றேவராவார
ஆசாரஞ் செய்யாராகி லறிவொடு புகழுமற்றுப்
பேசார்போற் பேச்சுமாகிப் பிணியொடு நரகில்வீழ்வார்.

(இ-ள்) ஒழுக்கந்தவறாது செய்வாராகில் [அவருக்கு] நல்ல ஞானத்தோடு புகழுமுண்டாம், அவ்வொழுக்கமே நன்மையாய் அதிகரிக்குமாகில் அவரே உலகத்தில் தெய்வமாவார் ஒழுக்கந்தவறுவாராகில் அறிவோடு நல்ல கீர்த்தியுமற்று ஊமையர்போல் பேசுவாராகி இம்மையிற் பிணியாலுழன்று மறுமையில் நரகத்தையடைவார்கள். ௨௰

செல்வம்வந் துற்றபோது தெய்வமுஞ் சிறிதுபேணார்
சொல்வதை யறிந்துசொல்லார் சுற்றமுந் துணையும்பேணார்
வெல்வதே கருமமல்லால் வெம்பகை வலிதென்றெண்ணார்
வல்வினை விளைவும்பாரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்.

(இ-ள்) உலகத்தில்வாழும் மானிடர்க்குச் செல்வமானது மிகுதியாய்வந்து சேர்ந்தபொழுது கொஞ்சமேனுந் தெய்வத்தையுங்கருதார், சொல்லுகின்றதைக் கேட்டுப்பதிலுஞ்சொல்லார், பந்துமித்திரர்களையுங் கவனியார், எக்காரியத்திலும் ஜயத்தையே கருமமாகக்

கருதுவாரேயல்லாமல், வெவ்விய பகைவனுடைய வலி மையையெண்ணார்கள் வலிய பாவவினையையும் பாரார்கள். ருக

யானையைச்சலந்தனி லிழுத்தவக்கரா
பூனையைக்கரைதனிற் பிடிக்கப்போகுமோ
தானையுந்தலைவருந் தலம்விட்டேகினால்
சேனையுஞ்செல்வமுந் தியங்குவார்களே.

(இ-ள்) ஜலத்திலிருந்து ஓர் பெரிய மதயானையைக் கடித்திழுக்கும்வலியுள்ள முதலையானது கரையிலுள்ள ஒரு பூனையைப் பிடிக்கக் கரையிற்செல்ல மாட்டாது. அதுபோல அரசர்களும் சதுரங்கசேனைகளுடன் தங்களிருபபிடம் விட்டுச்சென்றால் செல்வமிகுந்த சேனையுடன் தியங்குவார்கள். ருஉ

கொண்டநற் கலைகளோடுங் குணமிலாக் கோதைமாரைக
கண்டுவிண் டிருப்பதல்லாற் கனவிலும் புல்லவொண்ணா
துண்டென மதுவையுண்ண வோவியப் பூவில்வீழ்ந்த
வண்டினம் பட்டபாடு மனிதரும் படுவர்தாமே.

(இ-ள்) நல்ல சாத்திரப்பயிற்சியும் நற்குணமுமில்லாத மங்கையர்களைக் கண்ணால் நிதானித்துப் பார்த்து அவர்களை விலக்கவேண்டுமேயல்லாமல், கனவிலாயினுஞ் சேரவொண்ணாது சேருவரேல் எழுதிய சித்திரமாகிய தாமரையில் தேனுண்டென்று வீழ்ந்துவருந்திய வண்டுக்கூட்டங்கள் படும்பாடு அவர்களும் அடைவார்கள். ருரு

மயில்குயில் செங்காலன்னம் வண்டுகண் ணாடிபன்றி
அயிலெயிற் றரவுதிங்க ளாதவ னாழிகொக்கோ
டெறும்புவிண் கமலம்பன்மூன் றுறுகுண முடையோர்தம்மை
இயலுறு புவியோர்போற்று மீசனென் றெண்ணலாமே.

(இ-ள்) மயில், குயில், சிவந்த கால்களையுடைய அன்னம், வண்டு, கண்ணாடி, பன்றி, கூர்மைபொருந்திய பற்களையுடைய பாம்பு, சந்திரன், சூரியன், சமுத்திரம், உயர்ந்த ஆகாயம், தாமரை இந்தப் பதின்மூன்று பொருள்களினிடத்துமுள்ள குணங்களை வகித்தவர்களை உலகத்தவரெல்லாம் போற்றும் ஈசனென்று சொல்லலாம். [இவைகளின் குணங்களை விரிக்கிற்பெருகும், ஆசிரியர்களிடத்துக்கேட்டுணர்க.] ௫௪

தெருளிலாக்கலையினர் செருக்குமாண்மையும்
பொருளிலாவறிஞரைம் பொறியடக்கமும்
அருளிலாவறிஞர்த மௌனநாசமுங்
கருவிலாமங்கையர் கற்புமொக்குமால்.

(இ-ள்) தெளிவில்லாத கல்வியாளர்களுடைய அகங்காரமும், மனோ ஊக்கமும், பொருளில்லாத தரித்திரர்களுடையமெய், வாய், கண், மூக்கு, செவி யென்ற ஐம்பொறிகளினடக்கமும், அருளில்லாதஞானிகளின் மவுனநாசமும், மகப்பேறில்லாத மங்கையர்கள் கற்பும் ஆகிய இவைகள் ஒன்றுக்கொன்றுசமமாகும்.

மங்குலைம்பதி னாயிரம்யோசனை மயில்கண்டு நடமாடும்
தங்குபானுநூ றாயிரம்யோசனை தாமரை முகம்விள்ளும்
திங்களாதவற் கிரட்டியோசனை புறச் சிறந்திடு மரக்காம்பல்
எங்கணாயினு மன்பராயிருப்பவ ரிதயம்விட் டகலாரே.

(இ-ள்) ஐம்பதினாயிரம் யோசனை தூரத்திலுள்ள மேகத்தைக்கண்டு மயில் நடனம்பண்ணும், நூறாயிரம் யோசனை தூரத்திலுள்ள சூரியனைக்கண்டு தாமரை முகமலர்ச்சியைக்காட்டும், இருநூறாயிரம் யோசனை தூரத்திலுள்ள சந்திரனைக்கண்டு செவ்வல்லிமலர்ந்துசிறப்

யைடையும். கடவுள் எவ்வளவு தூரத்திலிருப்பாராயி னும் அன்பராயிருப்பவர் இருதயத்தைவிட்டு அகலார்.

சந்திரனில்லாவானந் தாமரையில்லாப்பொய்கை
மந்திரியில்லாவேந்தன் மதகரியில்லாச்சேனை
சுந்தரப்புலவரில்லாத் தொல்சபைசுதரில்வாழ்வு
தந்திகளில்லாவீணை தனமில்லாமங்கைபோலாம்.

(இ-ள்) சந்திரனில்லாத ஆகாயம், தாமரையில் லாத தடாகம், மந்திரியில்லாத அரசன், மலைபோலும் மதயானை யில்லாத சேனைகள், அழகிய வித்வான்களில் லாத சபை, மக்களில்லாத வாழ்க்கை, தந்திகளில்லாத வீணை, இவை யாவும் ஸ்தனங்களில்லாத மங்கையர் சுகம்போல் வீணாகும். ௱௭

குரைகடல்வறுமையுங் குறத்தியுண்மையும்
நரையறமருந்தையுண் டிளமைநண்ணலும்
விரைசெறிகுழலினள் வேசையாசையும்
அரையரன்பமைவது மைந்துமில்லையே.

(இ-ள்) சப்திக்காநின்ற சமுத்திரத்திற்குச் சலத ரித்திரமும், [திருடுந்தொழிற்கற்ற] குறத்திகளின் சத் தியமும், நரைதிரைகளறும்படி அவிழ்தமுண்டு பாலப் பருவமடைதலும், வாசனை செறிந்த கூந்தலையுடைய வேசியர்களுக்கு ஒருவர்மேலுண்மையான ஆசையுண் டாதலும், அரசர்கள் ஒருவரிடத்தில் நீங்காத அன்பு டையவராயிருத்தலும் ஆகிய இவை ஐந்தும் அடைவ தற்கரிது. ௱௮

மூடவனைமூர்க்கன்கொன்றால் மூர்க்கனைமுனிதான்கொல்லும்
மடவனை வலியான்கொன்றால் மறலிதா னவனைக்கொல்லுந்
தடவரை முலைமாதேயித் தரணியிலுள்ளோர்க்கெல்லா
மடவனை யடித்தகோலும் வலியனை யடிக்குங்கண்டாய்.

(இ-ள்) மூடனை அகங்காரகுணமுள்ள மூர்க்கன் கொன்றால், அம்மூர்க்கனை அவனிலும் அதிககோபமுடைய ஒருவன் கொல்லுவான். அறிவில்லாத ஏழையை வலியுள்ளவன் கொல்வானாகில், அவனை இயமன் கொல்வான். விசாலித்த மலைபோலு முலையையுடையவளே, ஏழையை அடித்தகோலே பலவானையும் அடிக்கும் என்றறிவாயாக. ருசு

பொருளிலார்க் கின்பமில்லை புண்ணிய மில்லையென்று
மருவிய கீர்த்தியில்லை மைந்தரிற் பெருமையில்லை
கருதிய கருமமில்லை கதிபெற வழியுமில்லை
பெருநிலந் தனிற்சஞ்சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே.

(இ-ள்) பொருளில்லாதவருக்கு இன்பம், புண்ணியம், பொருந்திய கிர்த்தி, மக்களாற் பெருமை, நினைத்தபடி முடிக்கும் வல்லமை, மோட்சமடையும் வழி, இவைகள் கிடையா. அவர் பெருத்த உலகத்தில் நடக்குந்தன்மையுள்ள பிணமென்று சொல்லும்படித் திரிவார்கள். சுய

தூம்பினிற் புதைத்தகல்லுந் துகளன்றிச் சுடர்கொடாது
பாம்புக்குப் பால்வார்த்தென்றும் பழகினு நன்மைதாரா
வேம்புக்குத் தேன்வார்த்தாலும் வேப்பிலைக் கசப்புமாறா
தாம்பல நூல்கற்றாலுந் துற்சனர் தக்கோராகார்.

(இ-ள்) வழியில் பலபேர் மிதிக்கும்படி புதைத்த கல்லாயிருந்தாலுந் தேய்ந்து களங்கமின்றிப் பிரகாசத்தைத்கொடாது. பாம்புக்குப் பாலைவார்த்துத் தினந்தோறும் அதனுடன் பழகிவந்தாலும் நன்மையைத்த

ராது. வேம்புக்குத் தேனைவார்த்து வளர்த்தாலும் அதின் கசப்புமாறாது. துற்சனர்கள் பலநூலைக்கற்றாலும் நல்லோராகார். ௬௧

கல்லாத மாந்தரையுங் கடுங்கோபத
 துரைகளையுங் காலந்தேர்ந்து
சொல்லாத வமைச்சரையும் துயரக்குதவாத்
 தேவரையுஞ் சுருதிநூலில்
வல்லாவந் தணர்தமையுங் கொண்டவனே
 டெந்நாளும் வலதுபேசி
நல்லார்போ லருகிருக்கு மனைவியையு
 மொருநாளு நமபொணாதே.

(இ-ள்) கல்வியில்லாத மனிதர்களையும், மிகுந்த கோபமுள்ள அரசர்களையும், வருங்காலமறிந்து சொல்லாத மந்திரிகளையும், துன்பம்வந்தவிடத்து உதவிசெய்யாத தெய்வங்களையும், வேதநூலில் வல்லவரல்லாத பிராமணர்களையும், கணவனேடெந்தநாளினும் வல்லமைபேசி நல்லவர்களைப்போல அருகிலிருக்கும் மனைவியையும் ஒருநாளும் நம்பக்கூடாது. ௬௨

தேளது தீயில்வீழ்ந்தாற் செத்திடா தெடுத்தபேரை
மீளவே கொடுக்கினலே மெய்யுறக் கொட்டலேபோல்
எளனம் பேசித்தீங்குற் றிருப்பதை யெதிர்கண்டாலுங்
கோளினர் தமக்குநன்மை செய்வது குற்றமாமே.

(இ-ள்) தேளானது நெருப்பில் விழுந்தால் இறந்துபோமென்று கருதி எடுத்தவரைக் கொடுக்கினலே துன்பமுறும்படி கொட்டுதல்போல, உலகத்தில் கேலிகள்பேசி பலவித தீங்குகளைச் செய்துக்கொண்டு இருப்பதை நேராகப்பார்த்து, கோளுடையவர்க்கு நன்மை செய்தால் குற்றமே உண்டாகும். ௬௩

அறிவுளோர் தமக்குநாளு மரசருந்தொழுதுவாழ்வார்
நிறையொடு புவியிலுள்ளோர் நேசமாய் வணக்கஞ்செய்வார்
அறிவுளோர் தமக்கும்யாதோ ரசட்டது வருமேயாகில்
வெறியரென் றிகழாரென்று மேதினி யுள்ளோர்தாமே.

(இ-ள்) அறிவுடையவர்களுக்கு அரசரும் வணங்கி வாழ்வார்கள். உலகத்தவர்களும் உண்மையான நேசத்தோடு பணிதல்செய்வார்கள். அவர்க்குயேதேனும் ஓர் குற்றம் நேரிட்டாலும் வெறுக்கத் தக்கவரென்று இகழ்ச்சிசெய்யார். இவ்வுலகினர் செய்கை இத்தன்மையதாம். ௬௪

குருவுப தேசமாதர் கூடிய வின்பந்தன்பால்
மருவிய நியாயங்கல்வி வயதுதான் செய்ததன்மம்
அரியமந் திரம்விசார மாண்மையிங் கிவைகளெல்லாம்
ஒருவருந் தெரியவொண்ணா துரைத்திடி லழிந்துபோமே.

(இ-ள்) ஆசிரியர் செய்த உபதேசம், ஸ்திரீயினிடத்தனுபவித்த இன்பம், தன்னிடத்துப் பொருந்திய நியாயம், கல்வி, ஆயுள், தன்னாற்செய்த தருமம், அரிதாகிய மந்திரம், துன்பம், வல்லமை இவைகளெல்லாம் ஒருவருக்குந் தெரியக்கூடாது. வெளியிடில் அழிந்துபோம். ௬௫

இடுக்கினால் வறுமையாகி யேற்றவர்க் கிசைந்தசெல்வங்
கொடுப்பதே மிகவுநன்று குற்றமே யின்றிவாழ்வார்
தடுத்ததை விலக்கினோர்க்குத் தக்கநோய் பிணிகளாகிய
உடுக்கவே யுடையுமின்றி யுண்சோறும் வெல்லமாமே.

(இ-ள்) துன்பமடைந்து தரித்திரித்தால் யாசிப்பவர்க்கு மனமகிழப் பொருள்கள் கொடுப்பது மிகவும் நன்று. அவர்கள் யாதொரு குறைவின்றி வாழ்வார்கள். [கொடுக்கின்றவரைத்] தடுத்து விலக்குகின்றவர்களுக்

குத் தகுதியான துன்பந்தரத்தக்க பிணியுண்டாகி உடுக்கத் துணியுமின்றி சாப்பிடுதற்குரிய அன்னமும் கிடையாமல் வெல்லம்போ லருமையாகும்.

மெய்யதைச் சொல்வாராகில் விளங்கிடு மேலுநன்மை
வையக மதனைக்கொள்வார் மனிதரிற் றேவராவார்
பொய்யதைச் சொல்வாராகிற் பொசன மற்பமாகும்
நொய்யரி சியர்களென்று நோக்கிடா ரறிவுளோரே.

(இ-ள்) மெய்சொல்வோரிடத்து நன்மையே விளங்கும். உலகத்தவரும் அவருடைய வார்த்தைகளை ஒப்புக்கொள்வார்கள். மானிடரில் அவரே தெய்வமாவார். பொய்பேசுபவரிடத்து உணவும் அற்பமாம். 'நொய்யரிசி கொதிதாளாது' என்னும் பழமொழிப் போலப் பெருந்தன்மையுடைய வர்களல்லவென்று மதித்து அறிவுடையோர்களும் அவரைப்பாரார்கள்.

தந்தையுரை தட்டினவன் றாயுரை யிகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்த மாணையை மறந்தோன்
சந்தமுறு வேதநெறி தாண்டினவன் நால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வதுமெய் கண்டீர்.

(இ-ள்) தகப்பன்சொல்லைத் தள்ளிநடந்தவன், தாய்வார்த்தையை இகழ்ச்சிசெய்தவன், அழகிய குருவினுக்ஞையை மறந்தவன். சந்தமுள்ள வேதநெறிகளைக் கடந்தவனாகிய இந்நால்வரும், சிவந்தநரகாக்கினி வாயின்கண் ணடைவது உண்மை யென்றறியக்கடவீராக.

சு அ

நாரிகள் வழக்கதாயி னடுவறிந் துரைத்தார்சுத்தர்
எரிபோற் பெருகிமண்மே லிருகணும்விளங்கிவாழ்வார்
ஓரமே சொல்வாராகி லோங்கிய கிளையுமாண்டு
தீரவே கண்கள்ரெண்டுந் தெரியாமல் மாழ்குவாரே.

(இ-ள்) ஏழைப்பெண்கள் முறையிட்ட வழக்கு களாயிருக்கினும் நடுநிலைமையறிந்து நியாயம் சொல்ப வரே பரிசுத்தர். அவர்கள் பெரிய தடாகம்போல்பெ ருகி பூமியின்மேல் இரண்டுகண்ணும் பிரகாசித்து வாழ் வார்கள். பட்சபாதமாய்ச் சொல்லுவரேல் அவர்கள் சுற்றமுமிழந்து இருவிழிகளுந் தெரியாதகுருடராய் மயங்கி வருந்துவார்கள். ௬௬

துப்புறச் சிவந்தவாயா டீயபஞ் சணையின்மீதில்
ஒப்புறக் கணவனோடே யோர்லீலை செய்யும்போது
கற்பகஞ் சேர்ந்தமார்பிற் கனதன மிரண்டுந்தைத்தே
அப்புற முருவிற்றென்றே யங்கையாற் றடவிப்பார்த்தாள்.

(இ-ள்) பவளம்போன்ற சிவந்த வாயையுடைய குலமகள் பரிசுத்தமான பஞ்சணையின்பேரில் தன் கணவனோடு ஒப்பற்ற ஒருவகைக் கலவிசெய்யுங்காலத் தில் பரதாரகமனமென்பதைசற்றும் நினையாத தன் நாயகனது மார்பில் பருத்த தன் முலைகளிரண்டுந் தைத்துப் பின்புறம் ஊடுருவிப்போய்விட்டதென்று தன்னழகிய கைகளால் தடவிப்பார்த்தாள். ௭௰

எரிநீர் நிறைந்தபோதங் கிருந்தன பட்சியெல்லா
மாரிநீர் மறுத்தபோது வந்திங் கிருப்பதுண்டோ
பாரினை யாளும்வேந்தன் பட்சமு மறந்தபோதே
யாருமே நிலையில்லாம லவரவ ரேகுவாரே.

(இ-ள்) தடாகத்தில் ஜலமிருக்கும்போது பக்ஷிக ளெல்லாம் வந்து கூடியிருந்தன. அந்நீர் வற்றியபோது பக்ஷிகள் அங்கு இருப்பதுண்டோ? அதுபோல உல கத்தையாளும் அரசன் பக்ஷத்தை மறந்தபோது ஒரு

வரும் நிலையில்லாமல் அவரவர்கள் பக்ஷமுள்ள விடந் தேடிச் செல்வார்கள். எக

மண்ணோர்சட்டி கரத்தேந்தி மறநாய்கௌவுங் காலினராய்
அண்ணாந்தேங்கி யிருப்பாரை யறிந்தோமறிந்தோ மம்மம்மா
பண்ணோர்மொழியார்பாலடிசில் பைம்பொற்கலத்திற்பரிந்தூட்ட
உண்ணாநின்ற போதொருவர்க் குதவாமாந்த ரிவர்தாமே.

(இ-ள்) கையில் மண்சட்டியேந்தி மறநாய் கௌவும் லட்சணமுடைய காலுள்ளவராய் எங்கு அன்னங் கிடைக்குமோ வென்று ஏங்கி யண்ணாந்திருக்கின்றவர்களோ அம்மம்மா? கண்டோம்! கண்டோம்!! அவர் யாரெனில், இராகம்போன்ற வார்த்தையை யுடைய மங்கையர்கள் பொன்கலத்தில் பாலோடு கலந்த அன்னத்தை மிக அன்போடு ஊட்ட உண்ணுஞ்சமையத்தில் ஒருவருக்கும் கொடாத உலுத்தர்களே. எஉ

மண்டலத் தோர்கள்செய்த பாவமன் னவரைச்சேரும்
திண்டிறன் மன்னர்செய்த தீங்குமந் திரினைச்சேரும்
தொண்டர்கள் செய்ததோஷந்தொடர்ந்துதங் குருவைச்சேரும்
கண்டன மொழியாள்செய்த கன்மமுங் கணவர்க்காமே.

(இ-ள்) உலகத்தவர்கள் செய்த பாவம் அரசனைச் சாரும், வலிமையுள்ள அரசர்கள் செய்த தீமை அமைச்சரைச் சேரும், அடியார்கள்செய்த குற்றம் தன் ஆசிரியனைப்பற்றும், கற்கண்டுபோலும் மொழியையுடைய மங்கையர்கள் செய்த பாவம புருடர்களுக்காகும்.

நற்குண முடையவேந்தை நயந்துசே வித்தலொன்று
பொற்புடை மகளிரோடு பொருந்தியே வாழ்தலொன்று
பற்புல ரோடுநன் றால் பகர்ந்துவா சித்தலொன்று
சொற்பெறு மிவைகணமூன்று மிமமையிற் சுவர்க்கந்தானே.

(இ-ள்) நற்குணமுடைய ராஜர்களை விரும்பி தரிசித்தலும், அழகுடைய நற்குண ஸ்திரீகளோடு கூடி வாழ்தலும், கல்விமான்களான நல்லாசிரியனையடுத்துத் தன்னையொத்த மாணாக்கர் பலரோடு நல்ல நூல்களைக் கேட்டுச் சந்தேகமறப்பயின்று கற்றுக்கொள்ளுதலுமாகிய இந்த மூன்று காரியங்களும் இகத்தில் அனுபவிக்கத்தக்க சுவர்க்கபோகங்களாம். ௭௪

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்க ணிமலன்றாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும்
பெரியசுகங் கிடைக்குங்காம
வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித்தாலி
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலைதானே.

(இ-ள்) சதாநிட்டை புரிந்து பற்றுநீங்கி, மனதின்கண் துறவடைந்த பெரியோர்களெல்லாம் பரமபதியின் பதத்தைத்துதிக்கக் கிடைத்ததுமுதல் மோட்சத்தை அடையும்வரையில், பெரிதான ஆனந்தத்தை அடைவார்கள். கன்னியர்கள் காமமென்னும் வெப்பத்திலே புத்திமயங்கிக் கிடப்பவர்களெல்லாம் சிறுமியர்க்கு விவாகமுறைபேசி விருப்பத்தோடு தாலிகட்டுவதுமுதல் சுடுகாட்டிலடுக்கிய கட்டைகளின் நடுமத்தியில்கொண்டுபோய் வைக்கும்வரையில், துன்பமே யனுபவிப்பார்கள். ௭௫

தலைவன் வருந்தல்.

அன்னம் பழித்தநடை யாலம்பழித்தவிழி
யமுதம்பழித்த மொழிகள்
பொன்னம் பெருத்தமுலை கன்னங்கறுத்தகுழல்
சின்னஞ்சிறுத்த விடைபெண்
என்னெஞ் சுருக்கவவ டன்னெஞ்சு கற்றகலை
யென்னென் றுரைப்பதினிநான்
சின்னஞ் சிறுக்கியவள் வில்லங்கமிட்டபடி
தெய்வங்களுக் கபயமே.

(இ-ள்) அன்னத்தை யிகழ்ந்த நடையையும், விஷத்தை நிந்தித்த கண்களையும், அமிர்தத்தைப் பழித்த சொற்களையும், பொன்போலுந் தேமற்படர்ந்து பருத்த முலைகளையும், கருநிறமுடைய இருண்டகூந்தலினையும், கண்டவர்கள் அதிநுட்பமென்று மதிக்கும்படி மிகவுஞ் சிறுத்த இடையினையுமுடைய பெண்ணானவள், எனது மனதை உருக்க அவள் தன் நெஞ்சிற்கற்றுக்கொண்ட சாத்திரவல்லபத்தை இனி நானென்னென்று சொல்லுவேன், அச்சிறுக்கியால் நேரிட்ட வில்லங்கங்களுக்குத் தெய்வத்தை நோக்கி முறையிடுவதன்றி யென்றால் செய்யத்தக்கதுயாது. எசு

ஆவின மழைபொழிய வில்லம்வீழ
அகத்தடியாண் மெய்நோவ அடிமைசாவ
மாவீரம் போகுதென்று விதைகொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ள
சாவோலை கொண்டொருவ னெதிரேசெல்லத்
தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பந்தீண்ட
கோவேந்த ருழுதுண்ட கடமைகேட்கக்
குருக்களோ தட்சணைகள் கொடுவென்றாரே.

(இ-ள்) பசு கன்றைப்பெற, மழை விடாது பெய்ய, வீடு இடிந்து விழ, வீட்டுக்குரிய மனைவி கெர்ப்பவேதனைப்பட, வேலையாள் இறக்க, ஈரங்காய்ந்து விடுகிறதென்று விதைக்க விரைகொண்டு ஓட, கடன்காரர் மறித்துக்கொள்ள, ஒருவன் சாவோலை எடுத்தெதிரே வர, நீக்கக்கூடாத விருந்தாளிவர, அவனைப் பாம்பு கடிக்க, அச்சமயத்தில் வேளாண்மைசெய்து சாப்பிட்ட பூமிகளின் தீர்வையை தலைமையான அரசர் கேட்க, அதுகாலை குருக்களானவரும் குறுக்கேநின்று தட்சணையைத் தாவென்றார். எஎ

தாய்பகை பிறர்கட்பாகில் தந்தையும் குணவாளுகில்
வாய்பகை மனைவியாரு மாவழ குற்றபோது
பேய்பகை பிள்ளைதானும பெருமைநூல் கல்லாவிட்டால்
சேய்பகை யொருவர்க்காகு மெனறனர் தெளிந்தநூலோர.

(இ-ள்) பிறருக்கு அனுகூலமாவுந் தனக்குப் பகையாகவு மிருக்கின்ற மாதாவும், அதிகக் கடன்பட்ட பிதாவும், மிகுந்த அழகுள்ளவளாய்த் [தனக்குவந்த] மனைவியும், பெருமையான சாஸ்திரங்களைக் கற்றுக்கொள்ளாத பிள்ளையும, ஒருவனுக்குக் கிடைக்குமாகில், அவன் யாவருக்கும பகையுடையவனென்றே நன்றாய் அறிந்த கிரந்தகர்த்தர்கள் சொல்வார்கள். எஅ

நிலைதளர்ந்திட்டபோது நீணிலத்துறவுமில்லை
சலமிருந்தகன்றபோது தாமரைக்கருக்கன்கூற்றம்
பலவனமெரியும்போது பற்றுதீக்குறவாங்காற்று
மெலிவதுவிளக்கேயாகில் மீண்டுமக்காற்றேகூற்றும்.

(இ-ள்) நீர்நிறைந்த தடாகத்திலுள்ள தாமரைப் புட்பத்திற்கு அக்காலத்தில் சிநேகனுயிருந்த சூரியனே

நீர்வற்றிய காலத்தில் அத்தாமரைக்குச் சத்துருவாய் நாசஞ்செய்வான். அடர்ந்த பெருங்காடுகள் தீப்பற்றி யெரியும்போது அப்பெருநெருப்புக்கு வாயுவாகியகாற் றுதவியாக நிற்கும. அவ்வித நெருப்பு தன்னளவிற் சுருங்கி யொரு தீபத்தளவாய் நின்றபோது அக்காற் றே அத்தீபத்திற்கு யமனாகும். அதுபோல, செல்வம்நி றைந்த காலத்தில் நெருங்கிய உறவினராயிருந்தவர்க ளும், அது தவறியகாலத்தில் பந்துத்துவநீங்கிப் பகை வராவார்கள். எச

மடுத்தபா வாணர்தக்கோர் மறையவ ரிரப்போர்க் கெல்லாங்
கொடுத்தாயார்வறுமையுற்றா கொடாதுவாழ்ந்தவரார்மண்மேல்
எடுத்துநா ணுண்டநீரு மெடாதகாட் டகத்துநீரு
மடுத்தகோ டையிலேவற்றி யல்லதிற் பெருகுந்தானே.

(இ-ள்) நெருங்கிய வித்வான்கள், மேலானவர்கள், வேதியர்கள், யாசிப்போர்கள் இவர்களுக்குக் கொடுத்த தினால் யார் தரித்திரத்தை யடைந்தார்கள். கொடா மல் பூமியின்மேலிருந்து யார் வாழ்ந்தார்கள. நாட்டில் யாவரும் எடுத்துண்ணத்தக்கத் தடாகஜலமும், ஒருவ ரும எடுத்துண்ணாத காட்டினிடத்துள்ள ஏரிநீரும், பொருந்திய கோடைகாலத்தில் வற்றியும [கார்காலத் தில்] ஜலம் நிறைந்தும் பெருகுமல்லவா? அ௰

உணங்கியொருகான் மாகியொருகண்ணின்றிச்செவியிழந்து
வணக்குநெடுவா லறுபுண்டு மன்னுமுதுகில் வயிறொட்டி
அணங்குநலிய மூப்பெய்தி யகல்வாயோடு கழுத்தோதிச்
சுணங்கன்முடுவல்பின்சென்றால்யாரைக்காமன் றுயாசெய்யான்

(இ-ள்) வாட்டமுற்றும், ஒருகால் முடமாகியும், ஒருகண் குருடடைந்தும், காதறுப்புண்டும், நீண்டுவ ளையும் வால் அறுபட்டும், உணவின்றி வயிறு முதுகோ

டொட்டியும், அழுகுகெட்டுமுதுமைவாய்ந்தும், அகன்ற வாயினையுடைய கலவடையைக் கழுத்தில் மாட்டிக் கொண்டும் திரியும் ஆண் நாயானது ஒரு பெண்ணின் பின் காமத்தாலோடித் திரியுமாமாகில் மற்றை எவர்களை மன்மதன் துன்பஞ்செய்யான். அக

கன்மனப் பார்ப்பார் தங்களைப் படைத்துக்
காகத்தை யென்செயப் படைத்தாய்
துன்மதி வணிகர் தங்களைப் படைத்துச்
சோரரை யென்செயப் படைத்தாய்
வன்மன வடுகர் தங்களைப் படைத்து
வானர மென்செயப் படைததாய்
நன்மனை தோறும் பெண்களைப் படைத்து
நமனையென் செயப்படைத் தனையே.

(இ-ள்) [ஓ நான்முகனே] கருங்கல்லைப்போன்ற நெஞ்சத்தையுடைய பிராமணரைப் படைத்திருநதும் காகத்தையும், துற்புத்தியுள்ள வணிகரைப் படைத்திருந்தும் திருடர்களையும, வலிய நெஞ்சத்தையுடைய வடுகரைப் படைத்திருந்தும் வானரத்தையும், அழகிய வீடுகள்தோறும் [கொடிய] ஸ்திரீகளைப் படைந்திருந்தும் எமனையும், யாருக யாது காரணத்துக்காக படைப்பித்தாய். அஉ

உண்ணல்பூச் சூடனெஞ் சுவத்த லொப்பனை
பண்ணலெல் லாமவர் பார்க்க வேயன்றோ
யண்ணல்தன் பிரிவினை யறிந்துந் தோழீ
மண்ணவந் தனையிது மடமை யாகுமால்.

(இ-ள்) என்னுயிர்ப்பாங்கியே உலகத்தில் கற்பிற் சிறந்த பெண்கள், மதுரமான ஆகாரங்களை யுட்கொள்ளுதலும், பரிமளமிகுந்த புட்பங்களை முடித்தலும், மனமகிழ்ச்சி முகமலர்ச்சிகளோடிருத்தலும், மற்றும்

பலவிதமான திவ்ய வஸ்திராபரணங்களால் தன்னை யலங்கரித்துக்கொள்ளு தலுமாகிய இவைகளெல்லாம் தத்தங்கணவர்கள் கண்டு களிப்பதற்காவே யல்லவோ [அவ்வாறிருக்க] பெருமையிற்சிறந்தவெனது நாயகன் தற்சமயம் என்னைவிட்டுப் பிரிந்திருப்ப துனக்குத் தெரிந்திருந்தும், என்னை யலங்காரஞ்செய்வதற்காக நீ வந்தது உன்னறியாமையினாலல்லவா. அங

கோளரி யடர்ந்தகாட்டிற் குறங்கில்வைத் தமுதமூட்டித்
தோளினிற் றூக்கிவைத்துச் சுமந்துபேறுவளர்த்த
ஆளனைக் கிணற்றிற்றள்ளி யழகிலா முடவர்சேர்ந்தாள்
காளநேர் கண்ணினாரைக் கனவிலும் நம்பொணாதே.

(இ-ள்) வெவ்விய சிங்கங்கள்வாழுங் கானகத்தில் துடையிலிருத்தியன்னமூட்டித் தோளிற்றூக்கிச்சுமந்து அன்பாக வளர்த்து வந்த புருடனைக் கிணற்றிற்றள்ளி ஓரழகில்லாத முடவனை ஒருத்தி கூடினாள். ஆதலால், விடத்துக்கொப்பான கண்ணுடையவரை கனவிலும் நம்பத்தகாது. அச

சேய்கொண்டாருங்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டாரும்பணியும் பட்டீச் சுரத்தானை
நோய்கொண்டா லுங்கொளலாம் நூறுவய தாமளவும்
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே.

(இ-ள்) சிவந்த நிறத்தைக்கொண்டு விளங்குந் தாமரைமலரிலுள்ள பிரமதேவனும், ஆதிசேடனைப் பாயாகக்கொண்ட மகாவிஷ்ணுவும் வணங்கித் துதிக்கும்படியாகத் திருப்பட்டீச்சுரத்தலத்தில் எழுந்தருளிய சிவபெருமானே [ஒருவன்] நூறுவயதளவும் வியாதியையுங் கொள்ளலாம், பேயையுங் கொள்ளலாம், பெண்களைக்கொள்ளல் ஆகாது. அரு

கஸ்தூரி முதலிய வாசனை வஸ்துக்களை விற்பனை செய்பவர், வேடர் குடியிருப்பிற்சென்று தங்கள் வர்த்தகத்தைக் காட்டியபோது நடந்த சம்பாஷணை.

நானமென்பது மணங்கமழ் பொருளது
நாவிலுண் பதுவோசொல்
ஊனுணங்குவோய் மடந்தைய ரணிவதா
முயர்முலைத் தலைக்கோட்டில்
ஆனதங்கது பூசினால் வீங்கிய
தமையுமோ வெனக்கேட்கக்
கானவேட்டுவச் சேரிவிட் டகன்றனர்
கடிகமழ் விலைவாணர்.

(இ-ள்) [வர்த்தகர்] நானமென்பது வாசனை கமழும் பொருளென்ன, [வேடர்] நாவினால் சுவைத்துச் சாப்பிடத்தக்க பதார்த்தமோ சொல்லென்ன, [வர்த்தகர்] ஊனுண்பவனே? ஸ்திரீகள் விசாலித்த முலையினிடத்து அணிந்துகொள்ளும் வாசனைத்திரவியம் என்ன, [வேடர்] அதைப்பூசில் முலை வீக்கம் அமுங்கிவிடுமோ? என்ன, [வர்த்தகர்] அக்கானகத்திலுள்ள வேடர் குடியிருப்பைவிட்டு நீங்கினர். அ-சு

கொண்டுவிண்படர் கருடன்வாய்க் கொடுவரிநாகம்
விண்டநாகத்தின் வாயினில் வெகுண்டவன்றேரை
மண்டுதேரையின் வாயினி லகப்படுவண்டு
வண்டுதேனுக ரின்பமே மானிடவின்பம்.

(இ-ள்) கருடன் வாயினிடத்தகப்பட்டு ஆகாயத்திற் கொண்டுசெல்லும் நீண்டநாகமும், அந்நாகத்தின் வாயில் அகப்பட்ட தேரையும், அத்தேரையின் வாயிலகப்பட்ட வண்டும், அத்தகைய வண்டானது மதுவை யுண்ணும் இன்பத்திற்கொப்பேயாகும், இவ்வுலகத்திலுள்ள மனிதர்களனுபவிக்கும் இன்பங்கள்.

கற்பூரப் பாத்திகட்டிக் கஸ்தூரி யெருப்போட்டுக்
கமழ்நீர் பாய்ச்சிப்
பொற்பூர வுள்ளியினை விதைத்தாலும் தன்குணத்தைப்
பொருந்தக் காட்டும்
சொற்பேதை யருக்கறிவிங் கினிதாக வருமெனவே
சொல்லினாலும்
நற்போதம் வாராதாங் கவாகுணமே மேலாக
நடக்குந்தானே.

(இ-ள்) கற்பூரத்தால் வரப்புகளிட்டுக் கஸ்தூரியையே எருவாகத்தூவி, வாசனைநீரையே பாய்ச்சி, அழகுண்டாக உருள்ளியை அதில் நட்டுவைத்தாலும், அதின் குணத்தையே செவ்வையாய்க் காண்பிக்கும். [அதுபோல] சொல்லத்தக்க அறிவில்லாதவர்க்கு இனிமையான அறிவுவருமென்று எவ்வளவுசொன்னாலும், நற்குணமானது சற்றும் வாராது அப்போதும் அவர்கள் தீயகுணத்தையே மேலாகக் காட்டுவர்.

தண்டுலாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டுநீரை முகநகரு கேந்தினாள்
கெண்டை கெண்டையென் றக்கரை யேறினாள்
கெண்டை காண்கிலள் நின்று தயங்கினாள்.

(இ-ள்) கொடிகளமைந்த தாமரைத் தடாகத்தினின்ற தண்ணீரை கையால்முகந்து ஒரு மங்கை தன் முகத்தினருகே யேந்திப்பார்த்தாள், [அதனுட்டெரிந்த] தன்நிழலைப் பார்த்து கெண்டை கெண்டையென்று கூவிக்கொண்டே கரையிலேறிப் பார்த்தபொழுது அக்கெண்டைமீனைக்காணாமல் நின்றுமயங்கினாள்.

வருவசந்தனக் குழம்புபல் சுவையுணவலம்பெற வமைத்தாலுஞ்
சருவசந்தேக மனமுள மாதரைத் தழுவலு மாகாதே
பருவதங்கள்போற் பலபல நவமணிப் பைம்பொனை யீந்தாலுங்
கெருவமிஞ்சிய மானிடர் தோழமை கிட்டலு மாகாதே.

(இ-ள்) பொருந்திய சந்தனக்குழம்பு முதலிய வாசனைத்திரவியங்களையும், பலவித சுவையுணவுகளையும், அழகுபெறச்சேகரித்தூத்தந்தாலும் எதிலுஞ் சந்தேகாஸ்பதமுண்டாக நடக்கும் விலைமாதர்களை யணைதல் தகாது. [அதுபோல] மலையளவாகிய அநேக நவரத்தினங்கள் அழுத்திய பசிய பொன்னாபரணங்களைக்கொடுத்தாலும் கெருவம் மிகுதியுள்ள மனிதர்களின்சிநேகம எவ்வளவும் கொள்ளுதல் கூடாது. ௯௰

நிலத்தலை நீரின்மூழ்கி நின்றவ டன்னைநேரே
குலத்தலை மஞ்ஞைகண்டு கூவெனக் காவிலேக
முலைத்தலை யதனைக்கண்டு மும்மதக் கரிவந்துற்ற
தலைத்தலை சிங்கமென்றக் களிறுகண் டேகிற்றம்மா.

(இ-ள்) பூமியினிடத்து ஜலத்தில் முழுகிநின்ற ஒரு மங்கையை கூட்டமாயிந்த மயில்கள் நேரே பார்த்து, அவள் சாயலுக்குப் பயந்து கூவென்றலறி ஓர் சோலையிற் புகுந்தது. அவள் முலைச்சிகரத்தைக் கண்டு மும்மதங்களைப் பொழியா நின்ற யானைகள் தங்களினமென்றோடிவந்தது. அவளிடையைக்கண்டு சிங்கமென்று பயந்து ஓடிப்போயிற்று. ௯௧

அற்பசந்தோஷிகளின் இயல்பைப்பற்றிக் கூறியது.

கரியொரு திங்களாறு கானவுன் மூன்றுநாளும்
இருதலைப் புற்றில்நாக மின்றுணு மிரையீதென்று
விரிதலை வேடன்கையில் விற்குதை நரம்பைக்கவ்வி
நரியனார் பட்டபாடு நாளையே படுவர்மாதோ.

(இ-ள்) ஒருவேடன் யானையின்மீது பாணப்பிரயோகம்பண்ணித் தானொரு நாகத்தாற்கடியுண்டு, அந் நாகத்தின் மீதேவிழுந்து யானையுந் தானும், நாகமும்,

இறந்துகிடக்கக் கண்ட [ஒரு நரி] யானையோ! ஆறு மாதத்துணவாகும். வேடனே! மூன்றுநாட்பொழுது போகும் புற்றுநாகமோ! இன்றுண்ணும் இரையாகும் என்று சந்தோஷித்துக்கொண்டே விரிந்த தலையையுடைய வேடனது கையிலுள்ள வில்லின் குதைநரம்பைக் கடித்தமாத்திரத்தில், அது அறுந்து அதனால் அந்நரி இறந்தது, அதுபோலவே அற்பசந்தோஷிகள்வீணாசை கொண்டு துன்பப்படுவார்கள். சூஉ

பூதலத்தில் மானிடராய்ப் பிறப்பதரி
தெனப்புகல்வர் பிறந்தோர்தாமும்
ஆதிமறை நூலின்முறை யருள்கீர்த்தி
யாத்தலங்க ளன்பாய்ச்சென்று
நீதிவழு வாதவகை வழக்குரைத்து
நல்லோரை நேசங்கொண்டு
காதவழி பேரில்லார் கழுதையெனப்
பாரிலுள்ளோர் கருதுவாரே.

(இ-ள்) உலகத்தில் மானிடராய்ப் பிறப்பதரிதெனச்சொல்வார்கள். அப்படிப் பிறந்தாலும் முதன்மையான வேதசாத்திரங்களின் முறைப்படி கிருபை, புகழ் இவற்றையுடையவராய் ஸ்தலயாத்திரைசெய்து நியாயந்தவறாதபடி வழக்குகள் தீர்த்து, பெரியோர்களுக்கு வழிபாடுசெய்து, நல்லவர்களென்று காதவழித்தூரமேனும் பேர்பெற்று இராதவர்களைக் கழுதைப்பிறப்பென்றே யாவருமிகழ்வார்கள். சூந

ஆரம்பூண்ட மணிமார்பா வயோத்திக்கரசே யண்ணலேகேள்
ஈரமிருக்க மரமிருக்க இலைகளுதிர்ந்த வாறேது
வாரங்கொண்டு வழக்குரைத்து மண்மேல்நின்று வலிபேசி
ஓரஞ்சொன்ன குடியதுபோ லுதிர்ந்துகிடக்குந் தம்பியரே.

(இ-ள்) மாலேபணிந்த அழகிய மார்பையுடைய அயோத்தியாபுரியையாளும் மகாராஜனுகிய அண்ணுவே கேட்பாயாக. ஈரமிருக்க மரமிருக்க அதின் இலேகள்பட்டும் உதிர்ந்துபோன காரணம் யாதென்று தம்பியானவன் கேட்க, அதற்கு அவன் பூமிமேலிருந்து பட்சபாதமாய்த் தனது வல்லமையினுல் வழக்குத் தீர்த்து ஓரவஞ்சனைசெய்பவர் குடிபோல உதிர்ந்து கிடக்கின்றது தம்பி என்றுரைத்தான். ௬௪

வல்லியந் தனைக்கண்டஞ்சி மரந்தனி லேறும்வேடன்
கொல்லிய பசியைத்தீர்த்தி ரட்சித்த குரங்கைக்கொன்றான்
நல்லவன் தனக்குச்செய்த நலமது மிக்கதாகும்
புல்லர்க டமக்குசசெய்தா லுயிர்தனைப் போக்குவாரே

(இ-ள்) புலியைக்கண்டு பயந்து ஓர் விருக்ஷத்தி லேறியிருந்த வேடனைக்கு உயிர்நீங்கத்தக்க மிகுந்த பசியைத் தீர்த்துரட்சித்த குரங்கை அவ்வேடனே கொன்றான். [ஆதலால்] நல்லோருக்குச்செய்த உதவி மிகுதியான நன்மையையேதரும். அற்பர்களுக்கு செய்த உதவி செய்தவனுக்கே மிகுந்த அபாயம் உண்டாக்கும். [இக்கதை கபோதவாக்கியத்திலுள்ளது]

தன்மான குலமானந் தன்னைவந்
 தடைந்தவர்க டங்கண்மானம்
என்மான மாகிலென்ன வெல்லவருஞ்
 சரியெனவே யெண்ணம்போந்து
கன்மானம் வைத்தெந்த நாளுமவர்
 தங்களுக்கு நன்மைசெய்வோர்
மன்மானி யடைந்தோரைக் காக்கின்ற
 வள்ளலென வழுத்தலாமே.

(இ-ள்) தான்பிறந்த ஜாதியபிமானம், தன்னிடம் வந்து அடைந்தவர்களுடைய மானம் முதலியவைகளை

யும், தன்னுடைய மானத்துக்குச் சமானமாகக்கருதி நல்ல அபிமானம் வைத்து எந்தக்காலத்திலும் நன்மை செய்யத்தக்கவர்கள் யாரோ? அவர்களையே பொருந்திய மானாபிமானமுள்ளவர்கள் அபயமென்றடைந்தவர்களை இரட்சிக்கத்தக்க வள்ளல்களென்று சொல்லுவார்கள். கூசு

தன்னைத்தான் புகழ்வோரும் தன்குலமே
பெரிதெனவே தான்சொல்வோரும்
பொன்னைத்தான் தேடியறம் புரியாம
லவைகாத்துப் பொன்றிநோரும்
மின்னைப்போன் மனையாளை வீட்டில்வைத்து
வேசைசுகம் விரும்புவோரும்
அன்னைபிதா பாவலரைப் பகைப்போரு
மறிவில்லாக் கசடராமே.

(இ-ள்) தன்னையே புகழ்கின்றவர்களும், தன் ஜாதியையே பெரிதென்றுரைப்பவர்களும், பொருளைத்தேடி தருமஞ்செய்யாமல் புதைத்து வைத்திறப்பவர்களும், மின்னலைப்போலும் [தேககாந்தியுடைய] மனைவியை வீட்டில்வைத்துப் பரத்தையர் போகத்தை இச்சிக்கின்றவர்களும், தாய் தந்தை வித்வான்கள் முதலியோரை விரோதித்துக் கொள்பவர்களுமாகியவிவர்கள் புத்தியில்லாத கீழ்மக்களாவார்கள். கூள

பெண்பேச்சொற் கேட்கின்ற பேயரெனுங்
குணமூடப் பேடிலோயர்
முண்டைகளுக் கிணையில்லா முனைவீரர்
பருடனான மொழியையோதே
உண்டிலக முதிப்பாருன கோததியற
மின்னதெனு முணாவேயில்லார்
அண்டினவா தமைக்கெடுப்பா ரழிவழக்கே
சொல்வதவ ரறிவுதானே.

(இ-ள்) மங்கையர் சொற்களைக் கேட்கின்ற பேயர்களாகிய குணங்கெட்ட பேடியனைய உலோபிகளும், விதவைகளுக்கும், ஒப்புரைக்கக்கூடாத சுத்தவீரர்களுமாகிய இவர்களையும் ஆண்டன்மை யுடையவரெனச் சொல்லக்கூடாது. உலகத்திற்பிறந்தவர்களுள் புகழும், தருமமும் இன்னதென்று ஆராய்ந்து அறியாதவர்களே அடுத்தவர்களைக் கெடுப்பவராவார், நியாயத்தை விட்டு நியாயவிரோதமாகப் பேசுவதே அவர்கள் புத்தியாகும். ௬௮

பொல்லார்க்குக் கல்விவரில் கெர்வமுண்டா
 மதனோடு பொருளுஞ்சேர்ந்தால்
சொல்லாதுஞ் சொல்லுவிக்குஞ் சொற்சென்றாற்
 குடிகெடுக்கத் துணிவர்கண்டாய்
நல்லோர்க்கிம் மூன்றுகுண முண்டாகி
 லருளதிக ஞானமுண்டாம்
எல்லோர்க்கு முபகார ராயிருந்து
 பரகதியை யெய்துவாரே.

(இ-ள்) துற்குணமுடையவர்களுக்குக் கல்வியுண்டாகில்கருவம் அதிகப்படும். அக்கல்வியோடு செல்வமுங்கூடினால் சொல்லத்தகாத வார்த்தைகளையுஞ் சொல்லும்படி செய்யும். தன் சொல் எங்குஞ்செல்லத்தகுந்த தாயிருந்தால், குடிகளைக் கெடுக்கவுந் துணிவார்கள் நற்குணமுடையார்க்குக் கல்வி, செல்வம், சொற்செல்லுதல் ஆகிய இந்த மூன்றுமுண்டாகில், அருளும் ஞானமும் பெற்று யாவருக்கும் உபகாரிகளாக இருந்து முத்தியடைவார்கள். ௬௯

உந்தியின் சுழியின்கீழ்சே ருரோமமாங் கரியநாகஞ்
சந்திர னெனவேயெண்ணித் தையலாள் முகத்தைநோக்க
மந்திர கிரிகள்விம்மி வழிமறித் திடுதல்கண்டு
சிந்துரக் கயற்கணோடிச் செவிதனக் குரைத்ததம்மா.

(இ-) உந்திச்சுழியாகிய நாபிக்கடுத்துள்ள உரோமமாகிய கரியநாகமானது [எனது தலைவியின்] வதனத்தைச் சந்திரனென்றுகருதி மேல்நோக்க, முலைகளாகிய மந்தரமலைகணெருங்கி வழியைத் தடுத்துக்கொள்ளுதலைப்பார்த்து செவ்வரிபரந்த கயலைப்போலுங் கண்கள் ஓடி செவிகளுக்குச் சொல்லியது. ஏ'

மாகமா மேடைமீதில் மங்கைநின் றுலாவக்கண்டு
ஏகமா மதியென்றெண்ணி யிராகுவந் துற்றபோது
பாகுசேர் மொழியினாளும் பதறியே பாதம்வாங்கத்
தோகைமா மயிலென்றெண்ணித் தொடர்ந்தரா மீண்டதன்றே.

(இ-ள்) வானமளாவிய மேடைமீதில் [எனது தலைவியான] மங்கைப்பருவமுடையவள் நின்று உலாவுகையில் ஒப்பற்ற பூரணச்சந்திரனென்றுநினைத்து [நவக்கிரகத்திலொன்றாகிய] இராகுவென்னுங் கரும்பாம்பானது நெருங்கிவந்தபோது பால்போலும் மொழியையுடையாள் மனமபதறித் தனது பாதங்கள்வருந்த நடக்கையில் [அவள் சாயலைக்கண்டு] தோகைகளையுடைய மயிலென எண்ணி அப்பாம்பு திரும்பிவிட்டது. ாக

சலதாரை வீழ்நீருஞ் சாகரந் தனைச்சார்ந்தாற்
குலமென்றே கொள்வதல்லாற் குறைகடல் வெறுப்பதுண்டோ
புலவர்கள் சபையிற்கூடிப் புன்கவி யாளர்சார்ந்தால்
நலமென்றே கொள்வதல்லா னவில்வரோ பெரியோர்குற்றம்.

(இ-ள்) சலதாரையில் ஒழுகும் [நாற்றமுள்ள] தண்ணீரும், சமுத்திரத்திற்புகுந்தால் அதை தன்னினமென்று ஏற்றுக்கொள்ளுமல்லாமல் வெறுத்துத் தள்ளுவதுண்டோ? இல்லை. [அதுபோல] பெரியவித்துவான்கள் சபையில் [நிரம்பிய நூற்கேள்வியில்லாத] அற்பகவிஞர்கள் வந்து சேர்ந்தாலும் கற்றவர்களென்று ஏற்றுக்கொள்ளுவரல்லாற் குற்றஞ்சொல்லார்கள்.

காரெனுங் குழல்கடப்பிக் கடுஞ்சிலை வாளிதப்பி
மேரென வளர்ந்துநின்ற வேழத்தின் கோடுதப்பித்
தாருறு கரியரோமச் சங்கிலி வழியேசென்று
சீரிய னெனவளர்ந்த செல்வனல் குலிற்கைவைத்தான்.

(இ-ள்) கூந்தலாகிய மேகத்துக்கும் [புருவம் தண்ணாகிய] வில்லம்புகளுக்கும், மகாமேரு போன்ற முலைகளாகிய யானைத்தந்தங்களுக்குந்தவறி, உரோமமாகிய சங்கிலியின் வழியே சென்று மேன்மையாய் வளர்ந்த செல்வத்தையுடைய எனது நாயகனானவன் அல்குலாகிய பாம்புப்படத்திற் கரங்களைச் செலுத்தினான். ௱௩

உண்டதை யொழிக்கும்வாச லோரநீ ரொழித்துமேலே
வண்டலு மழுக்குஞ்சேரு முதரமு மாராவாசல
உண்டத னிருப்பைக்கண்டு பெருங்களி யுள்ளங்கொண்டு
கண்டன ரிளைஞரெல்லாங் கதியெனக் கருதுவாரே.

(இ-ள்) உண்ட உணவுகளை [ஜீரணிக்கச்செய்து] வெளியிற்றள்ளும் குதவாயலைபடுத்து உவா நீரொழுக்கிச சேறனைய வழுக்குத்திரண்ட இரத்தம் மாறாத வாசலொன்றுண்டு. அதனிருப்பைப்பார்த்துப் பெருத்த சந்தோஷத்தை மனதிறகோண்டு வாலிபர்கள் இதுவே மோட்சமென்று கருதுகின்றார்கள் ௱௪

கரந்தொருவன் கணைதொடுக்க மேற்பறக்கும்
ராசாளி கருத்துங்கண்டே
உரந்துசிறு கானகத்தி லுயிர்ப்புறு
வேடுதனக் குறைகருங்காலை
விரைந்துவிடந் தீண்டவுயிர் விடும்வேடன்
கணையால்வல் லூறும்வீழ்ந்த
தரன்செயலே யாவதல்லாற் றன்செயலா
லாவதுண்டோ வறிவுள்ளோரே.

(இ-ள்) ஒரு காட்டில் ஒளித்திருந்து வலிய கணை தொடுக்கும் வேடனைக்கண்டு பயந்து பறந்த புறாக்களிரண்டில் ஆண் புறாவானது பெட்டைப் புறாவைப் பார்த்து, நம்மைப் பக்ஷிக்கக் கருதி பூமியில் வேடனிருக்கின்றான். ஆகாயத்தில் இராஜாளிப்பட்சி பறக்கின்றது. யாது செய்வோமென்று விசனப்பட, அந்தச்சமையத்தில் அவ்வேடனை புதரிலிருந்த பாம்பு கடித்து அதனாலவன் இறக்க, அவன் கைவில்லிலிருந்த அம்பு விடுபட்டு மேற்பறந்த இராஜாளியைக்கொன்று வீழ்த்தியதென்றால், எல்லாம் [சிவன்] கடவுள் செயலாலாவதல்லால் தன் செயலாலொன்றுமாவதில்லை. ௱௫

கொல்லுலை வேற்கயற்கண் கொவ்வையங் கனிவாய்மாதே
நல்லணி மெய்யிற்பூண்டு நாசிகா பரணமீதிற்
சொல்லரிற் குன்றிதேடிச் சூடிய தென்னோவென்றான்
மெல்லியல்கண்ணுமவாயும்புதைத்தனள்வெண்முத்தென்றாள்.

(இ-ள்) கொல்லனுலையிற்காச்சிக் கூர்மைசெய்த வேலாயுதமும், கெண்டைமீனையுமொத்த கண்களும், கொவ்வைப் பழம்போன்ற சிவந்த வாயினையுமுள்ள பெண்ணே! நல்ல ஆபரணங்களை தேகத்திலணிந்து நாசியாபரணத்தில் குற்றம் பொருந்திய குன்றிமணியைப் புனைந்தது யாது காரணம்? என்ன, அம்மேன்மையையுடையவள் [வெட்கித ;னது] கண்ணையும் செவ்வாயையும் மூடிக்கொண்டு வெள்ளை முத்தென்று சொன்னாள். ௱௬

அருகிலிவ ளருகிலிவ ளருகில்வர வுருகுங்
கரியகுழன் மேனியிவள் கானமயில சாயல்
பெரியதன மிடைசிறிது பேதையிவ ளையோ
தெருவிலிவ ணின்றநிலை தெய்வமென லாமே.

(இ-ள்) கறுப்பு நிறம் பொருந்திய கூந்தலையும், அழகிய மேனியையும, கானமயிலைப்போலும் சாயலையும், பருத்த முலைகளையும, சிறுத்த விடையினையுமுள்ள பெண்ணானவள பக்கத்தில் வர மனமானதுருகும்,

ஐயோ! வீதியில் இவள்நிற்கும் நிலையை நோக்கில்தெய்வப் பெண்ணென்றே மயங்கிச்சொல்லுதல் வேண்டும்.

அலகுவாள்விழி யாயிழைநன்னுதற்
றிலகங்கண்டெதிர் செஞ்சிலைமாரனுங்
கலகமேசெயுங் கண்ணிதுவாமென
மலரம்பைந்தையும் வைத்துவணங்கினன்.

(இ-ள்) வாளாயுதத்தைதயொத்த கண்ணுடைய [எங்கள்] கன்னியினது நல்ல நெற்றியிலுள்ள பொட்டினழகை செவ்விய வில்லையுடைய மன்மதன்கண்டு, கலகம் விளைக்கும் [சிவன் நெற்றிக்]கண்ணேவென்று நினைத்து தன் மலரம்புகளைந்தையும் [அவள் முன்]வைத்து வணங்கினன். ௱௮

குரங்கு நின்றுகூத் தாடியகோலத்தைக் கண்டே
அரங்கு முன்புநாய் பாடிகொண்டாடிய வதுபோல்
கரங்க ணீட்டியே பேசியகசடரைக் கண்டு
சிரங்க ளாட்டியே மெச்சிடுமறிவிலார் செய்கை.

(இ-ள்) குரங்கு கூத்தாடிநின்ற அழகைப்பார்த்து ஒரு நாய் பாடி மெச்சிக்கொண்டாடியதுபோல, கைக்ளை நீட்டிப் பேசும் மூடர்களைக் கண்டு சந்தோஷித்துத் தலைகளையாட்டி மெச்சிக்கொள்வது அறிவில்லார் தொழில். ௱௯

வில்லது வளைந்ததென்றும் வேழம துறங்கிற்றென்றும்
வல்லியம் பதுங்கிற்றெனறும் வளர்கடா பிந்திற்றென்றும்
புல்லர்தஞ் சொல்லுக்கஞ்சி பொறுத்தனர் பெரியோரென்றும்
நல்லதென நிருக்கவேணடாம நஞ்செனக் கருதலாமே.

(இ-ள்) வில் வளைந்துகொடுத்தல், யானை நித்திரை செய்தல், புலி பதுங்குதல், கிடாய் பின்வாங்குதல், கீழ்மக்கள் சொல்லுக்குப்பயந்து பெரியோர் பொறுமையோடிருத்தல் இவைகள்யாவையும் நன்மையென்று நினைக்ககூடாது விஷமென்றே சிந்திக்கவேண்டும்.

சலநதனிற் கிடக்குமாமை சலத்தைவிட் டகன்றபோது
கொலைபுரி வேடனகணடு கூரையிற் கொண்டுசெல்ல
வலுவினு லவனைவெலல வகையொன்று மில்லையென்றே
கலையெலி காகஞ்செய்த கதையென விளம்புவோமே.

(இ-ள்) தண்ணீரிலிருந்த ஓராமை கரையில் வந்த பொழுது அதைக் கொல்லுந் தொழிலையுடைய ஒரு வேடன் பார்த்துப் பிடித்து வலையிலிட்டுக் கட்டிக் கொண்டு போக, அந்த ஆமைக்குப் பிராணசிநேகித மாகவிருந்த ஒரு மானும், எலியும், காகமும் தங்கள் வல்லமையினால் அவ்வேடனை ஜெயிக்க யாதொரு வகை யினுமுடியாதென்று நினைத்து, ஒருவித தந்திரத்தால் ஆமையைத் தப்புவித்த கதையேயாகும், நீ செய்த காரியம். [இக்கதை பஞ்சதந்திரத்திலுள்ளது.] ௱௰௪

நிலமதிற் குணவான்றோன்றி னீள்குடித் தனரும்வாழ்வார்
தலமெலாம் வாசந்தோன்றுஞ் சந்தன மரத்திற்கொப்பாம்
நலமிலாக் கயவன்றோன்றி னன்குடித் தேசம்பாழாங்
குலமெலாம் பழுதுசெய்யுங் கோடரிக் காம்புநேராம்.

(இ-ள்) உலகத்தில் நல்லகுணமுடையவனாய் ஒருவன் பிறந்தால், அவனால் அவனது குலமுழுதும் வாழ்வையடையும். சந்தனவிருட்சம்போல் எத்திசையினும் புகழ் மணக்கும். நன்மையில்லாக் கீழ்மகனாய் உதித்தால் அவன் குலமும், தேசமும், பாழடையும். கோடரிக் காம்புபோல தன் ஜாதிக்கும் ஈனங்களுண்டாக்குவான்.

வியபிசாரத்தைக் கைகொண்ட புருட பாரியர்களுக்குள் நடந்த சம்பாஷணையை தலைவி தோழிக்குக்கூறியது.

உயிரனையா னுடன்கலந்த வுளவறிந்தீண்
டெனைமணந்தோ னுடன்றிச்செய்கை
செயலெனையென் றிலைமறைகா யெனத்தணவா
தகவவிரு வகையுந்தீதென்
றயில்விழியாய் மயற்பொதுவூழ் வலிததினும்
பெண்மதியே னதுவுமுழின்
இயலெனவள் ளுவருரைத்தார் சான்று நீ
யெனப்புகன்றே னின்புற்றனே.

(இ-ள்) வேல்போலுங் கூறிய கண்களையுடைய தோழியே! எனதுயிரினுஞ் சிறந்த சோரநாயகனிடத்

இல் நான் கூடிக்குலாவிவரும் மர்மத்தை எனது சொந்த நாயகனறிந்து, இலைமறைவு காய்மறைவொன்றில்லாமல் என்மேற் கோபங்கொண்டிப் படிப்பட்ட தகாதகாரியஞ் செய்யத் துணிந்தமைக்குக் காரணம யாதென்று கேட்க, அப்போது நான் உண்டென்பதும், இல்லையென்பதுமாகிய விரண்டு காரியங்களும் குற்றமாகவே முடியுமென்றெனக்குள் யோசித்து, காமம் பொதுவென்றும் தலையிலெழுதிய வெழுத்துத் தவருதென்றும் சொன்னேன். அவர்முன்னிலு மதிககோபங் கொண்டு விதியை மதியால் வெல்லக்கூடாதா வென்ன, அதற்கு நான் ஐயோ! என்புத்தி பெண்புத்தி யல்லவா? ஆண்மக்களுக்குள்ள சிறந்த புத்தியும், ஊழின்படியே நடக்குமென்று பெரியோர் கட்டளையிட்டிருக்கின்றார்களே, மேலும் இதற்குச் சாட்சி தாங்களே பிரத்தியட்சமாயிருக்க வேறு தேடுவானேன் என்றேன், அதைக் கேட்டு மனமகிழ்ந்தனர், இதை நீயறிவாயாக. ௱௰௩

நட்பிடைக் குய்யம்வைத்தார் பிறர்மனை நலத்தைச்செய்வார்
கட்புடைக் காமத்தீயார் கன்னியை விலக்கினோரும்
அட்டுட னஞ்சுகினோ ராயுளுங் கொண்டுநின்று
குட்டநோய் நரகில்வீழ்ந்து குளிப்பவ ரிவர்கள்கண்டாய்.

(இ-ள்) சிநேகத்தில் வஞ்சகஞ் செய்தவரும், அயலான் மனைவி இன்பத்தை யிச்சித்தவனும், காமாக்கினியால் வருந்துகின்ற தன்மனைவியை அவளிஷ்டந்தணியக் கலவாதவரும், கொல்லுந்தொழிலை மேற்கொண்ட போர்க்களத்தில் பயந்தோடுபவரும் [ஆகிய இவர்கள்] குஷ்டவியாதியடைந்து நெடுநாள் உலகத்தில் துன்பத்தை யனுபவித்துப் பின்பு நரகத்தில் விழுவார்கள்.

மதியிலா மறையோன்மன்னன மடந்தையை வேட்கையாலே
ருதுவது காலந்தன்னிற் றோஷமென் றுரைத்தேயாற்றில்
புதுமையா யெடுத்தபோது பெட்டியிற் புலிவாயாலே
அதிருடன் கடியுண்டன்றே யருநர கடைந்தான்மாதே.

(இ-ள்) விவேகமற்றவோர் பிராமணன் தன்னிடத்திற் கல்வி பயின்றுவந்த இராஜகுமாரத்தியின் மீது விடாமோகங்கொண்டு, அவள் புஷ்பவதியானகாலம் மிகவுந் தோஷமுடையதென்றும், உடனே அவளைப் பேழையுளடக்கஞ்செய்து நதி முதலிய நீரோட்டங்களில் விட்டுவிடவேண்டுமென்றும் அவள் தந்தையாகிய அரசனுக்குத் தெரிவித்து அவ்வாறே செய்வித்துப் பின்பு தான் அந்தப் பெட்டியைத் தேடிக்கொண்டு ஆற்றோரமாகச்சென்றோரிடத்தி லப்பெட்டியைக்கண்டு அதையெடுத் தாசையுடனே திறக்க, அதற்கு முன்னமே வேட்டையாடிவந்த வேறொரு அரசன் அப்பெட்டியைப்பார்த் தெடுத்துத் திறந்து அதற்குள்ளிருந்த கன்னிகையை அழைத்துக் கொண்டு வேட்டையிலகப்பட்ட புலியை யதிற்போட்டுப் பூட்டிய பழையபடி ஆற்றில விட்டுவிட்டானாதலால், அப்பெட்டிக்குள் இருந்த புலி யப்பிராமணனை யடித்துக்கொல்ல அதனாலிறந்து நரகத்தை யடைந்தான். கக௫

மையது வல்லியம்வாழ் மலைக்குகை தனிற்புகுந்தே
ஐயமும் புலிகுக்காட்டி யடவியிற் றுரத்துங்காலை
பையவே நரிகள்கோளாலே படுபொருளுணரப்பட்ட
வெய்யவம் மிருகந்தானே கொன்றிட வீழ்ந்ததன்றே.

(இ-ள்) ஓராட்டுக் கிடாவானது புலியிருக்கும்படியான ஒரு குகைக்குட்புகுந்து அப்புலியை ஒருவிதமாய் மிரட்டிச் சந்தேகத்தைக்காட்டிக் காட்டின்வழியாய் விரட்டுகிற காலத்தில் எதிரில்வந்த ஒரு நரியின் கோளால் அப்புலியானது உண்மையைத் தெரிந்துக் கொண்டு அவ்வாட்டின்மேல் பாய்ந்துகொல்ல ஆட்டுக் கிடாயிறந்தது. ககசு

மங்கைகைகேசி சொற்கேட்டு மன்னர்புகழ்
  தசரதனும் மரணமானான்
செங்கமலச் சீதைசொல்லை சீராமன்
  கேட்டவுடன் சென்றான்மான்பின்

தங்கையவள் சொற்கேட்ட ராவணனுங்
கிளையோடு தானுமாண்டான்
நங்கையர்சொற் கேட்பதெல்லாங் கேடுவரும்
பேருலகோர் நகைப்பர்தாமே.

(இ-ள்) அரசர் புகழும் தசரதன் கைகேசியென்னும்மனைவியின் சொற்கேட்டு மரணமடைந்தான், ஸ்ரீராமபிரான் ஜானகிசொற்கேட்டு மான்பின்சென்று வருந்தினன், இராவணன் தன்தங்கையாகிய சூர்ப்பநகையின் சொற்கேட்டுத்தன் சுற்றத்தோடு மாண்டான், ஆதலால் புத்தியில்லாத ஸ்திரீகள் சொற்கேட்பதெல்லாம் துன்பதிற்கே யிடமாகும உலகத்தவரும் நகைப்பார்கள்.

ஆதியா மிருவர்நட்புக் கவமதிப் புறவவர்க்குள்
சூதினாற் கபடஞ்செய்து துணைபிரிந் திடுவரென்றால்
வேதியன பவனவாயில் வேசைதாய் பச்சைநாவி
யூதிய கதைபோலாகி யுசநர செய்துவாரே.

(இ-ள்) முதலில் ஒற்றுமையான சிநேகத்தை கொண்டிருந்த இருவருள், ஒருவரை மற்றொருவர் அவமதிக்கவேண்டு மென்றெண்ணி அதற்குரிய வஞ்சகங்கள் பலவாகச்செய்து, அதனால் பகைநேர்ந்து ஒருவரைவிட்டொருவர் பிரிவது [எப்படி இருக்கிறதென்றால்] ஒரு தாசியானவள் தன் மகளோடு இணைபிரியாது கூடிக்குலாவிவந்த ஒரு பிராமணனுடைய குதத்தில் பச்சைநாவியை வைத்து ஊதிய கதையையொப்பாகும். [இக்கதை சிந்தாமணியிலுள்ளது.] ௧௧அ

அருமையும் பெருமைதானு மறிந்துடன் படுவர்தம்மால்
இருமையு மொருமையாகு மின்புறற் கேதுவுண்டாம்
பரிவிலாச் சகுனிபோலப் பண்புகெட் டவர்கடம்பால்
ஒருமையி னிரயமெய்து மேதுவே யுயருமன்றே.

(இ-ள்) ஒருவருடைய அருமை பெருமைகளையறிந்து உடன்பாடான சிநேகஞ்செய்வார்களாகில், இம்மை மறுமை இருமையினும் ஒரேவிதமான இன்

பத்தையடை வதற் கேதுவுண்டாகும். சகுனியைப் போல அன்பில்லாமல் துற்குணங் கொண்டவர்களின் சிநேகத்தால் மேன்மேலும் பாவங்களே அதிகப்பட்டு நரகவேதுவேயுண்டாகும். கக௯

ஒருவனே யிரண்டியாக்கை யூன்பொதி யானநாற்றம்
உருவமும் புகழுமாகு மதற்குள்ளீ யின்பமுற்று
மருவிய யாக்கையிஙகே மாய்ந்திடு மற்றியாக்கை
திரமதா யுலகமேத்தச்சிறந் துபின் சிறகுமன்றே.

(இ-ள்) உலகத்தில் மனிதர்களுக்கு பொய்யுடம் பென்றும் புகழுடம்பென்றும் இரண்டுடம்புகளுண்டு. அவற்றுள் இவ்வுலகவின்பங்களை நுகர்வதற்கேதுவாகிய நாற்றம்பொருந்திய மாமிசபிண்டமாகிய பொய்யுடம்பு இவ்வுலகத்திலேயே நிலையின்றி மாய்ந்துவிடும். புகழுடம்போவெனில், இம்மை மறுமைகளுக்கேதுவாய என்று மழியாமல் உலகமெங்கும் சிறந்த கீர்த்தியோடு நிலைநிற்கும். க௨0

வேலியானது பயிர்தனை மேய்ந்திட விதித்தாற்
காவலனவ னுயிர்தனைக் கவர்ந்திட நினைத்தால்
ஆலமனனையா பாலகர்க் கருத்துவ ராஞல்
மேலிதோர்ந்துடன் யார்கொலோ விலக்குவர் வேந்தே.

(இ-ள்) அரசனே! காவலாக ஏற்பட்ட வேலியே பயிரையுண்ணவும், எமன் உயிர்களைக்கவரவும், கொல்லத்தக்க விஷத்தைத் தாய்மார்களே பிள்ளைகளுக்கு ஊட்டவும் நினைப்பார்களாகில் இதையறிந்து தடுப்பவர் யார்? ௱உக

அறங்கெடு நிதியுங்குன்று மாவியு மாயுங்காய
நிரங்கெடு மதியும்போகு நீண்டதோர் நரகிற்சேர்க்கு
மறங்கெடு மறையோர்மன்னர் வணிகர்நல் லுழவோரென்றுங்
குலங்கெடு வேசைமாதர் குணங்களை விரும்பினோர்க்கே.

(இ-ள்) சாந்தகுணத்தையுடைய வேதியர், அரசர், வைசியர், உழவினர் என்னும் ஜாதிகளினுயர்வைக்

கெடுக்கத்தக்க பரத்தையரை இச்சித்தவர்களுக்குத் தருமங்கெடும், செல்வங்குறையும், உயிரழியும், தேககாந்தியுமாறும், புத்தியுங்கெட்டு நீண்ட நரகத்தையடைவார்கள். ௱௨௨

இரண்டு சகோதரிகள் தங்களிடங்கலந்த இரண்டு தலைவர்களைப்பற்றிக்கூறியது.

அரவிந்தனண்பனை சுதன்றம்பி மைத்துன னண்ணன்கையில்
வரமுந்தியாயுதம் பூண்டவன் காணுமற் றநுகவனோ
பரமன்றிகிரியை யேந்தியமைந்தன பகைவன வெறபை
யுரமென் றெடுத்தவன் மாற்றுன்றனசேவக னெண்ணொடியே.

(இ-ள்) தங்காய்! என் வீட்டிற்கு வந்தவன் தாமரைக்குச்சிநேகன் [சூரியன்] அவன் புத்திரன் [கர்னன] அவன் தம்பி [அருச்சுனன்] அவன் மைத்துனன் [கிருஷ்ணன] அவன் தமையன் [பலராமன்] அவன் கையிலுள்ள ஆயுதம [கலப்பை] அதை பூண்டிருப்பவன் [எருமைக்கடா] வென்றறிவாயாக வென்றுசொல்லி, உன் வீட்டிற்கு வந்தவன யாரென்று கேட்க, தமக்காய்! சிவபெருமான் வசிக்கும கயிலைமலையையெடுத்த [இராவணன்] அவனுக்குப் பகைவன் [ஸ்ரீராமபிரான்] அவனுக்கு தாசத்துவம் பூண்டவனும, அவ்விராவணனோடு பகைத்து எதிர்த்தவனும், பர்வதங்களையெல்லாம் இலேசாகப் பெயர்த்தெடுத்தவனுமாகிய ஆஞ்சனேயன் என்னும் குரங்கென்றறிவாயாக. ௱௨௨

இரண்டு நண்பர்கள் தாங்கள் கலவிசெய்த மங்கையர்களியல்பைக்கூறியது.

சங்கரன்றேவி தமையனமனைவி தனக்கு முன்னும்
மங்கையரேறிய வாகனங் காணுமற் றநுகவனோ
கொங்கைகளீரைந் துடையவளாயிக் குவலயத்தில்
எங்குந்திரியும் வயிரவ ரூாதியென் றேநினையே.

(இ-ள்) ஒருவன் மற்றவனைப் பார்த்து, நண்பனே! நீகலந்த மங்கை எத்தன்மையாளென சிவபெரு

பானுக்கு நாயகியாகிய பார்வதி, அப்பார்வதியின் தமை யன விஷ்ணு, அவ்விஷ்ணுவின் மனைவி இலக்குமி, அவ் விலக்குமிக்கு முன்பிறந்தவள் மூதேவி, அம்மூதேவி யானவளேறிய வாகனமென்னும் கழுதையென்று கூற, அதைகேட்டமற்றவன் நான்கலந்தமங்கையோவெனில், வயிரவக்கடவுளின் வாகனமாயும், பத்துமூலைகளையுடை யவளாய், ஊரெங்கும் திரிகின்ற நாயென்றறிவாயாக.

இந்திரன் பதங்கள்குன்று மிறையவர் பதங்கண்மாறு
மந்தர நிலைகள்பேறு மறுகயல் வறுமையாகும்
சந்திரன் கதிரோன்சாயுந் தரணியிர் றேயமாளும்
அந்தணர் கருமங்குன்றில் யாவரே வாழ்வர்மண்ணில்.

(இ-ள்) வேதியர்கள் தாங்கள் செய்யத்தக்க கிரி யைகளை செய்யாதொழிந்தால் இந்திரனது செல்வங் களும் குறையும். இராஜாக்கள் வாழ்க்கையும் மாறும். மந்தரமலையினது நிலைகளும் பெயரும் எவ்விடங்களி னும் வறுமை மிகுதியாம். சந்திரசூரியர்களும் நிலைகெடு வார்கள். பூவுலகமெல்லாம் பொலிவழிந்து நிற்கும். உலகில் வாழத்தக்கவர் யார்? ௧௨௫

என்னனைக்கன்று முததனைக்குளிக்கு
மிறையனை யனைக்குமேயன்று
மன்னனைக்கன்றிப் பின்னனைக்குதவா
வன்புளால் வருந்திவாடுவேனோ
முன்னனைக்கொன்று பின்னனைப்புரந்த
முதுபகை யவன்பிதாவுருமல்
கன்னனைக்கொன்று விசயனைப்புரந்த
* கவத்துவ ராமகிருஷ்ணயனே.

(இ-ள்) என் தாய்க்குமாத்திரமல்ல, முத்துக்குத் தாயான கரும்பை வில்லாக வளைக்கும் மன்மதனுக்குத் தாயாகிய இலக்குமிக்குப் பிறப்பிடமான சமுத்திரத் தாயுமா, பெற்ற தாய்க்கேயல்லாமல் பின்வளர்ந்த தாய்

---

* கவத்துவம் என்பது, கபடமென்னும் பொருளுக்கும் இடமாய் நின்றது.

க்குமுதவாத வலிய குயிற்பட்சியாலும். துன்பமுற்று வாட்டமடைவேனு? இராமாவதாரத்தில், மூத்தவனு கிய வாலியைக்கொன்று இளையவனுகிய சுக்ரீவனை இரக்ஷித்த பழமையான பகையை அவன் தந்தையான இந்திரனடையாமல் கிருஷ்ணுவதாரத்தில் கர்னனைக் கொன்று அருச்சுனனை இரக்ஷித்த கௌஸ்துவாபரண மணிந்த இராமகிருட்டினனே. கஉ௬

பண்புளருக் கோபறவை பாபத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கா ளுற்காலி - திண்புவியை
ஆள்வார் மதுரை யழகியசொக்கர்க் * கரவம்
நீள்வா கனநன் னிலம்.

(இ-ள்) நற்குணமுள்ளவருக்கு ஈ [கொடு], பாவச் செய்கைக்கு அஞ்சு [பயப்படு] நண்பற்றவரைக்காணில் விலங்கு [நீங்கு] வலிமிகுந்த உலகத்தைஆளும்படியான மதுரை சோமசுந்தரேசருக்குப் பணிவிடைசெய்.

இது மும்மூர்த்திகளின் உணவாதிகளைப்பற்றிக்கூறியது.

சிறுவனளை பயறு செந்நெற் கடுகு
மறி திகிரி தண்டு மணிநூற் - பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்ருழம் பூவே கறி.

(இ-ள்) பிரமனுக்குப் பயறு கறியும், செந்நெல் உணவும், தண்டம் ஆயுதமும், உபவீதம் பூஷணமும், அன்னம் வாகனமும், தாமரை வசிக்குமிடமாம். விஷ்ணுவுக்கு, வெண்ணெய் கறியும், பூமி உணவும், சக்கரம் ஆயுதமும், கௌஸ்துவம் ஆபரணமும், கருடன் வாகனமும், கடல் வசிக்குமிடமாம். சிவபெருமானுக்கு, பிள்ளைக்கறி கறியும், விஷம் உணவும், மான் ஆயுதமும, சர்ப்பம் பூஷணமும், ரிஷபம் வாகனமும், திருக்கைலாயம் வசிக்குமிடமுமாம். கஉஅ

---

* அரவம் நீளவாகன நன்னிலம் என றதில், அரவம்-பணி. வாகனம்-விடை. நிலம்-செய என வே பணிவிடை செயயெனபது பொருள.

சிரம்பார்த்தா னீசனயன் றேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன் - உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணான் சீராமன்
கலைவெளுத்த நேத்திதனைக் கண்டு.

(இ-ள்) சிவன் - தலையிலுள்ள சந்திரனைப் பார்த்தான், பிரம்மா-தன் மனைவியைப்பார்த்தான், சிவந்த தாமரைபோலுங் கண்ணன் - தன் கையிலுள்ள திருச்சங்கைப்பார்த்தான், பலமுடைய மலையையும் வெளுக்கச்செய்யும்படியான புயமுடைய ஸ்ரீராமனென்னும் பெயரையுடைய வண்ணான் - வஸ்திரம் வெளுத்துக் கொடுத்த நேத்தியைப் பார்த்தவுடனே.

கரியொன்று * பொன்மிகும் பையேறக்கற்றவர் சூழ்ந்துதொழ
எரியொன்று செல்வன் றுலாததினிலேறி விருண்டமஞ்சு
சொரிகின்ற நாகமின் சோற்றினிலேறித் தொடர்துவர
நரியொன்று சொநதக் கனலேறிவந்தது நங்களத்தே.

(இ-ள்) யானை உருவமைந்த கணபதி பெருச்சாளியிலேறியும, கல்விமான்கள் சூழ்ந்து துதிக்க முருகக் கடவுள் மயிலிலேறியம், சூல்கொண்ட மேகங்கள் படர்ந்து மழைபொழிகின்ற பருவதத்திலுற்பவித்த உமாதேவி அன்னப்பட்சியிலேறியும், சமபு நந்தியிலேறியும் நம்மிடத்தேவந்தார்கள். க௫௰

ஒருபாதி மால்கொள மற்றொருபாதி யுமையவள்கொண்
டிருபாதி யாலு மிறந்தான்புராரி—மிருநதியோ
பெருவாரிதியிற பிறைவானிற சாப்பம் பிலத்திற்கற்ப
தருவாராபோஜ கொடையுனைக் யோடென்கை தந்தனனே.

(இ-ள்) போஜமகாராஜனே! ஒரு பாகததை விஷ்ணு கொள்ளவும், மற்றொரு பாகத்தை உமையவள் கொள்ளவும, ஆக இரண்டு பாகத்தாலும் திரிபுர கர்த்தனை சிவன் இறநது போயினன். [அவரிடத்திலுள்ளவைகள்

* மிகுபொனமை-பெருசசாளி. எரியொனறு செலவன - முருகன- துலாஸ்நானககட்டம், மாயூரம் - மயில. நாகமின. வரையுமை சோறு அனனம். சொந்தககனல - நநதி. [நம்தி.]

எவ்வாறாயிற்றெனில்] தரித்துக்கொண்டிருந்த கங்கை பெரிய சமுத்திரத்திலும், சந்திரன் வானத்திலும், சர்ப்பங்கள் பாதாளத்திலும், கற்பகவிருட்சத்திற்குச் சமானமான கொடைத்தன்மை உன்னிடத்திலும், ஓடு என்னிடத்திலும் கொடுத்தனன். ௧௫௧

கம்பமத கடகளிற்றான் றில்லைவாழுங்
கணபதிதன் பெருவயிற்றைக் கண்டுவாடி
யும்பரெலாம் விழித்திருந்தா ரயில்வேற்செங்கை
யுடையவறு முகவனுங்கண் ணீராறானான்
பம்புசுடர் கண்ணனுமோ நஞ்சுண்டான்மால்
பயமடைந்தா னுமையுமுடல் பாதியானாள்
அம்புவியைப் படைத்திடவே தவமேதெனா
அயனுமன மிரங்காம லலைகின்றானே.

(இ-ள்) மும்மதங்களோடு கூடிய யானைமுகமுடையவராய்த் திருத்தில்லையில் வீற்றிருக்கும் கணபதியினுடைய பெருத்த வயிற்றைப்பார்த்துப் பயந்து, தேவர்கள் * இமையாதிருந்தார்கள். வேலாயுதத்தைக் கையில்வைத்திராநின்ற ஆறுமுகன் கண்ணீர் ஆறானான். பொருந்திய அக்கினிக்கண்ணையுடையசிவன் விடத்தையுண்டான். மகாவிஷ்ணு பயமடைந்தான். உமாதேவியும் தேகம் பாதியானாள். பிரமா உலகத்தைப்படைத்திடுதல் வீண் என்று மனமிறங்காமல் அலைந்தான்.

காமமே குலத்தினையும் நலத்தினையுங் கெடுக்கவந்த களங்கம்
காமமே தரித்திரங்க ளனைத்தினையும் புகட்டிவைக்குங்கடாரங்
காமமே பரகதிக்குச் செல்லாமல் வழியடைக்குங் கபாடங்
காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங் கத்திதானே.

(இ-ள்) [பெண்கள் மயக்கமாகிய] காமமே, ஜாதிநெறியையும்; நன்மையையும் கெடுத்துவிடும்படியான குற்றம். வறுமைகளை நிறைத்துவைத்திருக்கும் பொக்கிஷம். முத்திமார்க்கத்திற் செல்லாமலடைத்திருக்குங் கதவு. அனைவரையும் பகை யுண்டாக்கிக் கழுத்தறுக்கத்தக்க வாளாயுதமாம். ௧௫௫

* இமையாதிருத்தல்-கண்ணிமையாதிருத்தல், ஈராறு-பனிரண்டு, பயம்-ஜலம், அன்னம்-ஓதிமம், இவைகள் இயற்கையாயுள்ளதை வியந்து புதுமையாகக் கூறியிருக்கின்றார்.